# நியாயப்பிரமாணம்

---

## LAW

55-0115

சனிக்கிழமை மாலை, ஜனவரி 15, 1955

பிலடெல்பியா சபை, சிகாகோ,
இல்லினாய்ஸ், அமெரிக்கா

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

# நியாயப்பிரமாணம் (55-0115)

*நாம் ஜெபம் செய்வோமா?*

*எங்கள் பரம பிதாவே, பல வருடங்களுக்கு முன்பு இந்த பூமிக்கு வந்து, தகுதியற்ற பாவிகளாகிய எங்களுக்காக கல்வாரியில் எங்கள் இடத்தை ஏற்றுக்கொண்டு மரித்து, எங்களுக்குப் பதிலாக ஆக்கினைக்குள்ளான, சர்வபரிபூரண இரத்தப்பலியான கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்காக இன்றிரவு நாங்கள் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்." அவர் எங்களுக்காக அளித்த அந்த அற்புதமான பலியின் உமது குணாதிசயங்களை அனுபவிக்க,*

இந்த இரவுக்காக நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

இப்போது பிதாவே, இன்றிரவு உமது பிள்ளைகளுக்கு அவருடைய வார்த்தையை நாங்கள் திறக்கும் போது, அல்லது வேதாகமத்தைத் திறக்க முயற்சிக்கும்போது, விசுவாசிகள் இன்னும் பலப்படும்படியாகவும், பின்பு அவிசுவாசி விசுவாசியாக மாறும் படியாகவும், பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு வார்த்தையையும் எடுத்து மக்களின் இருதயங்களில் விதைக்க வேண்டும் என்று ஜெபிக்கிறோம். பிதாவே, நோயாளிகளையும் தேவையுள்ளவர்களையும் குணமாக்கும். உமது நேச குமாரனாகிய இயேசுவின் நாமத்தில் இதைக் கேட்கிறோம். ஆமென்.

அமருங்கள்.

இன்றிரவு இங்கு வந்திருக்கும் எங்கள் அன்பான பார்வையாளர்களுக்கு இனிய மாலை வணக்கம். நன்றியுள்ள இருதயங்களுடன், மீண்டும் ஒருமுறை எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களை

வாழ்த்தும்படி உங்களிடம் வந்திருக்கிறோம். இங்கு சுவரோரமாக நிற்பவர்களுக்கு இடமில் லாமல் பலர் நின்றுகொண்டிருப்பதைக் குறித்து நாங்கள் வருந்துகிறோம்; ஆனால் நாளை, நாம் லேன் டெக் உயர்நிலைப் பள்ளியில் (Lane Tech High School) இடமளிப்போம்.

இப்போது, நாளை மதியம், (அது இரண்டரையா? அல்லது...) மூன்று மணிக்கு என்று நாங்கள் நம்புகிறோம்: நாளை எனக்கு ஒரு பெரிய நாள், நாளை மதியம் ஒரு போதனை, சுவிசேஷ போதனை ஆராதனை உள்ளது. ஜெப அட்டைகள் விநியோகிக்கப் படும்.

நாளை மாலை, ஏழரை மணிக்கு, நாளை இரவு லேன் டெக் உயர்நிலைப் பள்ளியில் சுகமளிக்கும் ஆராதனைகளுக்கான எங்கள் கூட்டங்கள் தொடங்குகின்றன. நீங்கள் வரும்படி உங்களை அழைக்கிறோம்.

காலையில் நீங்கள் உங்கள் சபைக்குச் செல்ல வேண்டிய இடமாகிய, உங்கள் சொந்த சபையின் ஞாயிறு பள்ளிக்குச் செல்லுங்கள்.

இது ஞாயிற்றுக்கிழமை காலை, நீங்கள் அங்கே இருக்க வேண்டும். உங்கள் போதகர் அங்கே உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார், எனவே உங்கள் சொந்த சபைக்குச் செல்லுங்கள். பின்னர் நாளை மதியம், போதகரையும் சபையின் மற்ற விசுவாசிகளையும் அழைத்துக் கொண்டு, எங்களுடன் லேன் டெக்கிற்கு வாருங்கள். ஒருவேளை கர்த்தர் நாளை மதியமும் தமது வார்த்தையிலிருந்து நமக்கு எதையாவது கொடுக்கக்கூடும்.

நான் அவ்வளவு சிறந்த போதகன் அல்ல. நான்—நான் ஒரு போதகன் அல்ல, ஆனால் கர்த்தராகிய இயேசுவைப் பற்றி எனக்குத் தெரிந்த கொஞ்சம் காரியங்களை, அவரைப் பற்றி நான் அறிந்தவற்றை மக்களுக்கு வெளிப்படுத்த விரும்புகிறேன். ஒருவேளை அதன் மூலமாக, ஏதோவொரு வழியில்... ஒரு செய்தியை வழங்க எனக்கு ஒருபோதும் பயிற்சியளிக்கப்படவில்லை. நான் அதைச் செய்யக்கூடிய ஒரே வழி, எதையாவது வாசிப்பது, பின்பு நான் அதை எங்கே பார்த்தாலும், நான்... அவர் எனக்குக் கொடுப்பதைப் பற்றிப் பேசுவதுதான். அதை

எப்படிச் செய்வது என்று எனக்குத் தெரிந்தது அவ்வளவுதான்.

மேலும் நான்—நான் ஒரு கென்டக்கியன் (Kentuckian), தெற்கத்தியவன், மற்றும் எனது—எனது இலக்கணம் மிகவும் மோசமானது. நான் "hit," "hain't," "tote," "fetch," "carry" போன்ற பல வார்த்தைகளை அங்கு பயன்படுத்துகிறேன். ஆனால் அது என்னவென்று உங்களால் புரிந்து கொள்ள முடிந்தால், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

2 இந்தியானாவின் போர்ட்லேண்டில் எனக்கு நினைவிருக்கிறது... நான் இதை ஒரு நகைச்சுவைக்காகச் சொல்லவில்லை, ஏனென்றால் இது நகைச்சுவை செய்வதற்கான இடமல்ல. ஆனால் நான்... அந்தக் கூட்டத்தில் ஒரு சிறுமி வந்தாள்; உங்களில் பலர் அதைப் பார்த்திருப்பீர்கள். அது *வி தி பீப்பிள் (We The People)* என்ற பத்திரிகையில் முழுமையாக வந்திருந்தது; ஒரு சிறிய பார்வையற்ற சிறுமி, அவள் மேடையைக் கடந்து வந்து கொண்டிருந்தாள், மக்கள் அங்கே வரிசையாகச் சென்றுகொண்டிருந்தனர், நான் அவர்களுக்காக

ஜெபித்துக்கொண்டிருந்தேன். சகோதரர் போஸ்வொர்த் கூட்டத்தில் இருந்தார், மற்றும் பலரும் இருந்தனர். எனவே அவர்கள்... அந்தச் சிறுமி என்னைப் பிடித்துக்கொண்டு அப்படியே வைத்துக் கொண்டாள். அவள் ஒரு—ஒரு—ஒரு சிறுமி, கண்ணாடி அணிந்திருந்தாள், பார்வை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. அவளால் நிழல்களைப் பார்க்க முடிந்தது, ஆனால் அவளால் பார்க்க முடிந்தது அவ்வளவுதான் என்று நான் நினைக்கிறேன். நான் இல்லை... என்னை மன்னியுங்கள். அவளால் நிழல்களைக் கூடப் பார்க்க முடிந்தது என்று நான் நம்பவில்லை. அவள் அவ்வாறு செய்திருக்க முடியும் என்று நான் கொஞ்சமும் நினைக்கவில்லை.

இப்போது அந்தச் சம்பவம் எனக்குச் சரியாக நினைவில்லை, ஆனால் அதற்கு முந்தைய நாள் இரவு, பிறவியிலேயே பாதங்கள் வளைந்திருந்த ஒரு குழந்தை பல வருடங்களாக காலில் பிரேஸ்கள் (braces) அணிந்திருந்தது. பரிசுத்த ஆவியானவர் பேசி, அது எவ்வளவு காலமாக, நான்கு அல்லது ஐந்து வருடங்களாக, அந்தப் படியாக இருந்தது என்பதையும், என்ன

நடக்கப் போகிறது என்பதையும் அவர்களிடம் சொன்னார். பின்பு அந்தத் தாய் அங்கே நடந்து சென்று குழந்தையின் கட்டுகளை அவிழ்த்தாள், இதோ அது மேடையைக் கடந்து சாதாரணமாக நடந்து வந்தது.

அங்கேதான் சக்கர நாற்காலியில் இருந்த ஒரு மனிதர்... மேயோஸ் மருத்துவமனையில் செவிலியராக இருந்த திருமதி. மோர்கன், புற்றுநோயிலிருந்து சுகமாக்கப்பட்டிருந்தார். அவர் இறந்தவர்களின் பட்டியலில் இருக்கிறார், எட்டு வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டார் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அவர் இன்னமும் செவிலியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். நல்லது, ஏனென்றால் கர்த்தராகிய இயேசு அவளைக் குணமாக்கினார். மேலும் அவர் இந்த மனிதன் மீது அக்கறை கொண்டிருந்தார். சரி, நாங்கள் அவனுக்கு ஒரு ஜெப அட்டையைக் கொடுக்க முடியும், ஆனால் அவனை ஜெப வரிசைக்கு அழைப்பது, அதை எங்களால் செய்ய முடியாது. ஏனென்றால் அது... நாம்... அதைச் செய்வது தேவனின் இறையாண்மையின்படி நடக்க வேண்டும். நாங்கள் ஒவ்வொரு நாளும் புதிதாக

அட்டைகளை வழங்குகிறோம். மேலும் என் மனதில் எங்கு தோன்றுகிறதோ, அங்கு நான் சிலரை அழைக்கிறேன், தேவன் அதைத்தான் விரும்புகிறார் என்று நான் உணருகிறேன் (பார்க்கிறீர்களா?), அவர் எதைத் தேர்ந்தெடுக் கிறாரோ அதைச் செய்வார். அந்த வகையில்... அது எங்கே இருக்கும் என்று யாருக்கும் தெரியாது. மேலும் அட்டைகளை வழங்கும் சகோதரர்களாகிய பில்லி மற்றும் சில நேரங் களில் சகோதரர் வுட், மேலும் சில நேரங்களில் அவருக்கு யார் உதவி செய்கிறார்களோ, அவர்கள்... அவர்களுக்கு... அது எங்கே இருக்கும் என்று அவர்களுக்குத் தெரியாது. மேலும் எனக்கும் தெரியாது. நான் சும்மா வந்து அங்கிருந்து தேர்ந்தெடுக்கிறேன்.

மேலும் கூட்டத்தில் ஒவ்வொரு இரவும், அந்தப் பரிதாபமான மனிதனுக்கு அது கிடைக்கவில்லை. மேலும் அவர்... அது கூட்டத்தின் கடைசி இரவாக இருந்தது. அவர்கள் அவனைச் சுமந்து வந்து படுக்க வைத்தார்கள். அவன் நெளிய முயன்று கொண்டிருந்தான்; அவன் மல்லாக்கப் படுத்தி ருந்தான். கர்த்தராகிய இயேசு அவனை

நலமாக்குவதை நான் ஒரு தரிசனத்தில் கண்டேன். ஆகையால் நான்... அந்தத் தரிசனத்தில் நான் சென்று அவனைத் தொட வேண்டியிருந்தது. ஏன் என்று எனக்குத் தெரியாது; அது... தேவன் சொன்னதைச் செய்வதற்கு அப்படியே கீழ்ப்படிவது, அவ்வளவுதான்.

3 ஆகையால் அங்கே அவனைத் தொடுவதற்கு—தொடுவதற்கு இறங்கிச் சென்ற போது, கீல்வாதத்தால் முழுவதுமாகக் கூனிப் போன ஒரு மனிதன் அங்கே இருந்தான், அவனுடைய விரல்கள் மற்றும் மற்றவை முடிச்சுகளாக மாறும் அந்த மோசமான நிலையில் இருந்தான். மேலும் அதைக் கடந்து செல்லும்போது, அந்த மனிதன் தொடப் பட்டவுடனேயே, அவர்கள் அவனை உட்கார வைத்திருந்த சக்கர நாற்காலியில் இருந்து எழுந்து குதித்து ஆடத் தொடங்கினான். இந்த மற்றொரு முதியவர் என் உடைகளைத் தொட்டார், அல்லது ஏதோவொன்றைச் செய்து கடந்து சென்றார்... இப்போது, குணமாக் குவதற்கு என் கோட்டிலோ அல்லது உடைகளிலோ ஒன்றும் இல்லை என்பதை

நீங்கள் அறிவீர்கள். என்னிடம் ஒன்றுமில்லை. அவனுடைய விசுவாசத்தை நிலைநிறுத்தக்கூடிய ஏதோ ஒன்று அங்கே இருந்தது (பார்க்கிறீர்களா?), அவன் விசுவாசித்த ஏதோ ஒன்று.

சுமார் ஒரு வாரம் கழித்து, சக்கர நாற்காலியில் இருந்து குணமாக்கப்பட்ட அந்த மனிதன் தன் காரில் சாலையில் சென்று கொண்டிருந்தான், அவன் வயலுக்கு அப்பால் பார்த்தபோது, ஒரு மனிதன் டிராக்டரைக் கொண்டு உழுதுகொண்டிருந்தான், அவர்கள் ஒருவரையொருவர் அடையாளம் கண்டு கொண்டனர். அங்கே இருந்த அந்த மனிதன் தான் ஸ்ட்ரெச்சரில் இருந்தவன். எனவே அவர்கள் காரிலிருந்தும் டிராக்டரிலிருந்தும் குதித்து ஓடிவந்து ஒருவரையொருவர் கட்டிக் கொண்டு, கர்த்தரைத் துதித்துக்கொண்டு அப்படியே குதித்து ஆடினார்கள்.

சக்கர நாற்காலியில் இருந்த இந்த மனிதன் குணமாக்கப்பட்டதன் மூலமாகத்தான், இங்கி லாந்தின் மன்னர் ஜார்ஜுக்காக ஜெபிக்க நான் அழைக்கப்பட்டேன், அவர், எனக்காக

ஆளனுப்பிய அவருடைய தனிச் செயலாளருக்கு ஒரு—ஒரு நண்பராக இருந்தார், அவருக்காக ஜெபிக்கும்படி. மேலும் ராஜாவுக்கு இருந்த மல்டிபிள் ஸ்களீரோசிஸ் குணமாக்கப்பட்டது. அவர் ஒரு நேரத்தில் இவ்வளவு நேரம் மட்டுமே நிற்க முடிந்தது என்று நான் நம்புகிறேன், அல்லது அதுபோல ஏதோ ஒன்று. எனக்கு நினைவில்லை. அவருடைய முத்திரை யுடன் அது என் வீட்டில் எழுத்துப்பூர்வமாக இருக்கிறது.

4 இப்போது, அந்த இரவு அந்தச் சிறிய பார்வையற்ற சிறுமி, அவளது பார்வையைப் பெற்றாள். ஆசீர்வதிக்கப்பட்ட கர்த்தராகிய இயேசு அந்தச் சிறுமிக்கு எப்படிப் பார் வையை—மீட்டளித்தார் என்பது நிச்சயமாக ஒரு அற்புதமான காரியமாக இருந்தது. மேலும் அதைக் குறித்து அவள் மிகவும் மகிழ்ச்சி யடைந்தாள். அது எல்லா இடங்களிலும் ஒரு பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. மேலும் வி தி பீப்பிள் அதை வெளியிட்டது. அந்த—அந்தப் புத்தகம், பல மொழிகளில் அச்சிடப்பட்டுள்ளது, மிகப்பெரியவற்றில் ஒன்று... நல்லது, அதில் கட்டுரைகள் உள்ளன, ஓ, அறிவியல் மற்றும்

மதம் மற்றும் பலவற்றைப் பற்றி. அதன்பிறகு அசெம்ப்ளீஸ் ஆஃப் காட் மக்களாகிய உங்களுடைய பத்திரிகையிலும் அது வெளியானது. பல சுகமளிக்கும் பத்திரிகைகளும் அதை வெளியிட்டன. அதற்காக, அதைச் செய்த நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்கே எல்லாத் துதியும் செலுத்தப்படுவதாக.

5 சற்று நேரத்திற்கு முன்பு சகோதரர் போஸ், "மக்கள் பல மைல்களுக்கு அப்பாலிருந்து வந்திருக்கிறார்கள்" என்று சொல்வதை நான் கேட்டேன். அவர்கள் வந்திருக்கிறார்கள். ஒருவேளை ஹோட்டல்கள் மற்றும் பலவற்றிலிருந்து தங்கியிருக்கும் மக்களிடமிருந்து எனக்குக் கடிதங்கள் வரலாம், அது நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெகு தொலைவிலிருந்து வந்து, "நல்லது, நாங்கள் வெகு தூரம் பயணம் செய்து வந்திருக்கிறோம்; நாங்கள் வந்திருக்கிறோம்; நாங்கள் ஒரு நோயுற்ற குழந்தையைக் கொண்டுவந்திருக்கிறோம். நாங்கள்..." என்று கூறலாம். அதன்பிறகு சாட்சி. ஒருவேளை அடுத்த நாள் எனக்கு மற்றொரு கடிதம் வரலாம், "நேற்று இரவு வீட்டிற்குச் செல்லும்

வழியிலேயே கர்த்தர் அதைக் குணமாக்கினார், மகிழ்ச்சியாகப் போகிறோம்" என்று. அதன் பிறகு... எனவே இந்த எல்லாக் காரியங் களுக்காகவும் நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

6 இப்போது, இந்தக் கட்டடத்தில் ஒரே ஒரு சக்கர நாற்காலி அல்லது கட்டில் மட்டுமே எஞ்சியிருப்பதை நான் கவனிக்கிறேன்; வேறொன்றுமில்லை. மேலும் ஒரு பெண் ணைப்பற்றி அவர்கள் நேற்று முன்தினம் இரவு என்னிடம் சொல்லிக்கொண்டிருந்தார்கள், அவளைப் பற்றிய ஒரு தரிசனம் காணப்பட்டு, மேயோ பிரதர்ஸ் மருத்துவமனையில் ஏதோவொன்றிலிருந்து குணமாக்கப்பட்டாள் என்று. இங்கே ஒரு சிறுமி சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறாள். அன்பான சகோதரியே, இனிமேல் இன்னும் ஒரு மணிநேரத்தில் நீங்கள் அதில் உட்கார்ந்திருக்க மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன். இயேசுகிறிஸ்து உங்களை நலமாக்கி அதிலிருந்து வெளியே கொண்டு வருவார். கீழே வந்து உங்களைக் குணமாக்குவதுபோல, அதைக்குறித்து என்னால்

ஏதாவது செய்ய முடிந்திருந்தால் நான் விரும்பியிருப்பேன். அன்பான சகோதரியே, எனக்கும் வீட்டில் ஒரு சிறுமி இருக்கிறாள்; அவளுக்கு எட்டு வயதுதான் ஆகிறது, ஆனால் சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருப்பது அவளாக இருந்தால் என்ன செய்வது என்று நான் நினைக்கிறேன்? இயேசு அவளைக் குண மாக்கினால் நான் சந்தோஷப்படுவேன். அவர் உங்களைக் குணமாக்கினால் நான் சந்தோஷப் படுவேன். அவர் என்னிடம் என்ன சொல்கிறாரோ அதை மட்டுமே என்னால் சொல்ல முடியும்; நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள். நீங்கள் ஜெபியுங்கள். அதைச் செய்வது அவருடைய சித்தம் என்று நான் நம்புகிறேன். உங்கள் விசுவாசம் அந்த அளவுக்கு உயரு மானால், அது முடிந்துவிடும். ஆகையால்...

அது ஒரு காரியம்; இந்தக் கட்டடத்தில் அமர்ந்துகொண்டு சிலரைப் பார்க்கும்போது, ஒருவேளை இங்கே பயங்கரமாகப் பாதிக்கப் பட்ட ஒருவர் அமர்ந்திருப்பதையும், இங்கே அதிக நோயின்றி ஒருவர் அமர்ந்திருப்பதையும் பார்ப்போம், ஆனால் இந்தப் பாதிக்கப்பட்டவர் குணமடையலாம் மற்றும் இந்த மற்றொரு

நோயாளி அப்படியே இருக்கலாம், அது எப்படி என்று நமக்கு ஒருபோதும் தெரியாது. மேலும் சில நேரங்களில் பாதிக்கப்பட்டவர் அப்படியே இருப்பார், அதிக நோயின்றி இருப்பவர் குணமடையலாம்.

7 இதோ சில இரவுகளுக்கு முன்பு, ஒருவேளை அந்த நபர் இன்றிரவு இந்தக் கட்டடத்தில் இருக்கலாம். அவர்கள் இங்குள்ள இந்தப் பெரிய—பெரிய பள்ளியிலிருந்து, கல்லூரியிலிருந்து வந்தவர்கள். அவர்கள் சொன்னார்கள்—ஒரு கடிதம் எழுதி, "சகோதரர் பிரன்ஹாம், ஒரு வருடமோ அல்லது இரண்டு வருடங்களோ காணாமல் போயிருந்த அந்தப் பெண்ணுக்காக நாடு முழுவதும் உங்களைத் தொடர்புகொள்ள நாங்கள் முயற்சி செய்தோம்," அல்லது அதுபோல ஏதோவொன்றைச் சொன்னார்கள். மேலும் FBI அந்தப் பெண் இறந்துவிட்டதாகக் கைவிட்டுவிட்டது, அல்லது அதுபோன்ற ஏதோ ஒன்று. அவள் ஏதோவொரு வகையான, ஓ, போதைப்பொருள் கும்பல் அல்லது அவள் இருந்த வேறு ஏதோவொன் றிலிருந்து விலகிச் சென்றிருந்தாள் என்று நான் நினைக்கிறேன். ஏதோ ஒரு ஆளுடனோ அல்லது

வேறெதிலுமோ சென்றுவிட்டாள், அவளைப் பற்றித் தெரிந்ததெல்லாம் அவ்வளவுதான். அவர்கள் என்னிடம் ஜெபிக்கச் சொன்னால் ஒருவேளை கர்த்தர் என்ன நடந்தது என்பது குறித்து எனக்கு ஒரு தரிசனத்தைக் காட்டுவார் என்று அவர்கள் நினைத்தார்கள்.

அங்கே—பல்வேறு இடங்களிலிருந்து பலர் இங்கே வந்திருக்கிறீர்கள், நீங்கள் உங்களைப் பற்றியே சிந்தித்துப் பாருங்கள், வேறு யாராவது பேசுவதை நீங்கள் எங்காவது பார்த்திருக் கிறீர்களா அல்லது கேட்டிருக்கிறீர்களா என்று சிந்தித்துப் பாருங்கள், ஒவ்வொரு முறையும் என்ன நடக்கும் என்று அவர் சொல்லும்போது, அது ஒவ்வொரு முறையும் அப்படியே நடக்கிறது. எனவே இது உங்கள் சகோதரன் அல்ல என்பதை நீங்கள் காண்கிறீர்கள், ஏனென்றால் நான் வெறும்... என்னால் முடியும்... வெறும் ஒரு மனிதன்.

8 ஆனால் அன்று ஜெபிப்பதற்கு எனக்குப் பல வகையான காரியங்கள் இருந்தன. நோயுற்ற மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் பலரும் இருந்தார்கள். நான், "ஆகா," என்று

நினைத்தேன். நான் அன்று இரவு உள்ளே சென்று சுமார் பதினொரு மணி வரை ஜெபித்தேன். நான் என் அறைக்குள் சென்று படுக்கைக்குச் சென்றேன். அடுத்த நாள் காலை சுமார் மூன்றரை அல்லது நான்கு மணிக்கு நான் எழுந்தேன், “நல்லது, இந்த நேரத்தில் அவர் என்னை எதற்காக எழுப்பினார் என்று ஆச்சரியப்படுகிறேன்” என்று நினைத்தேன். நான் எழுந்து, விளக்கைப் போட்டு, வேதாகமத் திலிருந்து ஒரு அதிகாரத்தை வாசித்துவிட்டுச் சிறிது நேரம் காத்திருந்தேன். சிறிது நேரத்திற்குப் பிறகு நான் மீண்டும் படுக்கத் தொடங்கினேன். நான் நிமிர்ந்து பார்த்தபோது, ஒரு இளம் பெண் நடந்து வருவதைக் கண்டேன். அவள் பழுப்பு நிற வெல்வெட் போன்ற உடையில் (அப்படித்தான் நீங்கள் அழைப்பீர்கள் என்று நான் ஊகிக்கிறேன்) இருந்தாள், கோட் மற்றும் பாவாடைப் பகுதி தனித்தனியாக இருக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, அவள் அப்படி நடந்து வந்துகொண்டிருந்தாள், ஒருவித சிவப்பு நிற முடி, மங்கிய, அடர் சிவப்பு நிற முடி, பார்ப்பதற்கு ஈர்க்கக்கூடிய பெண், சற்று வலிமையானவள். அவள் சிரித்துக் கொண்டி

ருந்தாள். அவள் தன் வீட்டிற்குத் திரும்பி நடந்துகொண்டிருந்தாள்.

ஆகையால் இது கர்த்தர் விரும்பிய ஏதோவொன்றாக இருக்கும் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். எனவே விடிந்த வுடனேயே எங்கள்—எங்கள், அதாவது என் மனைவி, அந்தக் கடிதத்தைப் பெற்ற ஒரு சகோதரியை அழைத்தாள்; அதில் எந்த அடையாளமும் கொடுக்கப்படவில்லை. அவள் அழைத்தாள், அது அந்தப் பெண்தான். அது அவள்தான், அந்த அடையாளம் சிவப்பு நிறத் தலைமுடி, மங்கிய சிவப்பு நிற முடி, அவள் தன் வீட்டிற்குத் திரும்பும் வழியில் இருந்தாள். கர்த்தர் எவ்வளவு அற்புதமானவர்.

9 அன்று காலை என் முன்பாக ஒரு சிறு குழந்தையை நான் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்தேன். நான் அலுவலகத்திற்கு அழைத்தேன், அவர்கள் இதுவரை அனுப் பப்படாத—எல்லாப் பட்டியல்களையும் வாசித் தார்கள். “ஓ தேவனே, இந்தக் குழந்தை எங்கே இருக்கிறது?” என்று நான் நினைத்தேன். நான் மீண்டும் பார்த்தேன், வீட்டில் இருந்த

பட்டியலை எடுத்து வாசித்துப் பார்த்தேன், குழந்தையே இல்லை. என்னிடம் இருந்த தெல்லாம் கென்டக்கியில் இரண்டு கண்களிலும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சுமார் ஐந்து வயது குழந்தை மட்டுமே. ஆனால் அவர், "ஒரு பச்சிளம் குழந்தை" என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தார். அந்தக் குழந்தை எங்கே இருக்கும் என்று ஆச்சரியப் பட்டுக்கொண்டே நான் தேடிக்கொண்டிருந்தேன். எந்தத் தரிசனமும் இல்லை. நான்... ஆனால் அது அங்கே இருக்கிறது என்று எனக்குத் தெரியும்; அது ஒரு பச்சிளம் குழந்தை.

சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்பு எனது சபையில் உட்கார்ந்திருந்தது எனக்கு நினைவுக்கு வந்தது, ஒரு சிறுமி என் காதில் கிசுகிசுத்து, "என் தங்கைக்காக ஜெபியுங்கள்" என்று சொன்னாள். "அது ஒரு பாப்டிஸ்ட் சுவிசேஷகரான ரெவரெண்ட் லெட்ஃபோர்டின் மகள்," என்று நான் நினைத்தேன். அது அவள்தான் என்றும், அதைத்தான் அவள் என்னிடம் சொன்னாள் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன். நல்லது, நான் அழைத்தேன், தொலைபேசிப் புத்தகத்தில் அவரது பெயரைக்

கண்டுபிடித்து, ரெவரெண்ட் லெட்ஃபோர்டை அழைத்தேன். ஆனால் அவர் வீட்டில் இல்லை.

10 எனவே நான் மீண்டும் எனது அலுவலகத்திற்கு அழைத்தேன், அப்போது செயலாளர், "நல்லது, அவர் இந்த நகரத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார், அவள் பெயர், நான் மறந்து விட்டேன், தாம்சன் என்று நான் நம்புகிறேன், அல்லது அதுபோல ஏதோவொன்று... ஜாக்சன், ஜாக்சன். எனவே அவர் சொன்னார்... அவள் எனக்கு—அவளுடைய தந்தையின் பெயரைக் கொடுத்தாள், தாமஸ் ஜாக்சன். எனவே நான் அவர்களை அழைத்து, "நான் சகோதரர் பிரன்ஹாம்" என்று சொன்னேன். நான், "நான் மனநலம் பாதிக்கப்பட்டிருக்கிறேன் என்று நீங்கள் இருக்க—நினைக்க நான் விரும்ப வில்லை ஆனால்..." என்று சொன்னேன்.

அதற்கு அவள், "ஏன், சகோதரர் பிரன்ஹாம்?" என்று கேட்டாள்.

நான் சொன்னேன், "நல்லது, இன்று காலை, கடந்த இரண்டு மணிநேரமாக, படிக்கும்

அறையிலிருந்து வந்ததிலிருந்து, ஒரு பச்சிளம் குழந்தை என் முன்பாகத் தொடர்ந்து நின்று கொண்டிருக்கிறது" என்று நான் சொன்னேன். மேலும் நான், "என் காதில் கிசுகிசுத்த சிறிய... உங்கள் சிறிய பேத்தியை, போதகரின் குழந்தையை, அவளது தங்கை நோயுற்றிருந்தாள் என்பதை நான் நினைத்தவுடனேயே..." என்று நான் சொன்னேன். "அது அந்தக் குழந்தைதான் என்று பரிசுத்த ஆவியானவர் என்னை எச்சரித்தார்," என்று நான் சொன்னேன்.

அவள் அழத் தொடங்கினாள். அவள், "சகோதரர் பிரன்ஹாம்," என்று சொல்லி, "நிச்சயமாக எனக்கு உங்களைத் தெரியும். நான்—நான் உங்கள் சபைக்கு வருகிறேன்," என்று சொன்னாள். நிச்சயமாக அங்கு யார் வருகிறார்கள் என்று அறிந்துகொள்ளும் அளவுக்கு நான் அங்கே இருப்பதில்லை. அவள், "எனக்குப் புரிகிறது," என்று சொன்னாள். அவள், "நம்முடைய கர்த்தர் எவ்வளவு அற்புதமானவர்," என்று சொன்னாள். "கடந்த பத்து நாட்களாகக் குழந்தை அரைகுறை மயக்க நிலையிலேயே இருக்கிறது. அதற்காக எதுவும் செய்ய முடியாது. மருத்துவர்கள் அதைக்

கைவிட்டுவிட்டார்கள். அது மருத்துவமனையில் இருக்கிறது, இன்று காலை அவர்கள் அதற்கு இரத்தமேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதனுடைய தந்தையும் தாயும் பதிலளிக்காததற்குக் காரணம், குழந்தை எந்த நேரத்திலும் போய்விடும் என்று அவர்கள் அங்கே காத்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்று சொன்னாள்.

*11* மேலும் ஒரு குழந்தைக்கு எப்படி இரத்தமேற்றுவார்கள் என்று எனக்குத் தெரியும், அது நரம்பிலிருந்து, ஊசியை இங்கே தலையில் செலுத்துவார்கள். பார்க்கிறீர்களா? மேலும் அது மிகவும்... அந்தச் சிறுவனுக்கு மிகவும் வலிப்பதாகத் தெரிகிறது, ஆனால் அங்குதான் அவர்களால் நரம்பைப் பிடிக்க முடியும். மேலும் நான் சொன்னேன், "சரி, இரத்தமேற்றுதல் முடியும் வரை நான் ஒரு மணிநேரம் காத்திருப்பேன், பிறகு நான் மருத்துவமனைக்குச் செல்வேன்."

அவள் அழ ஆரம்பித்தாள், "சகோதரர் பிரான்ஹாம், குழந்தை... என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்றாள்.

நான் சொன்னேன், "எந்த சந்தேகமும் இல்லை, குழந்தை பிழைக்கும்." நான் சொன்னேன்—நான் சொன்னேன், "அது எனக்குத் தெரியும்."

அவள் சொன்னாள், "ஓ, சகோதரர் பிரான்ஹாம், நான் இதை என் முழு இருதயத்தோடும் நம்புகிறேன். நீங்கள் அதைச் சொன்னால், நான் அதை நம்புகிறேன்."

நான் சொன்னேன், "நான் சொன்னேன் என்பதற்காக அதைச் சொல்லாதீர்கள்; இது ஒரு தரிசனம் அல்ல, மாறாக இது ஒரு வெளிப்பாடு என்பதால் சொல்லுங்கள். எனக்குத் தெரிந்திருந்தது—குழந்தையைப் பற்றி மறந்துவிட்டேன், ஆனால்—தேவன் அதைத் திரும்ப வெளிப்படுத்தினார்." எனவே நான் சொன்னேன், "நான் இப்போது குழந்தைக்காக ஜெபிக்கப் போகிறேன், ஒரு மணிநேரம் ஜெபிப்பேன், பிறகு நான் மருத்துவமனைக்குச் செல்வேன்."

**12** மேலும், நண்பர்களே, சரி, மருத்துவமனை உங்களுக்கு ஒரு பதிவைக் கொடுக்க முடியும், தந்தை மற்றும் தாய். நான் சுமார் ஒரு

மணிநேரம் கழித்து, அல்லது ஒருவேளை ஒன்றரை மணிநேரம் கழித்து மருத்துவ மனைக்குச் சென்றேன். தாய் தன் முகத்தில் ஒரு பெரிய புன்னகையுடன் எனக்காகக் காத்துக் கொண்டு நின்றாள். நான் சொன்னேன், "நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?" நான் சொன்னேன், "நீங்கள் திருமதி லெட்ஃபோர்டா, கண்ணியத் திற்குரிய டி. டபிள்யூ. லெட்ஃபோர்டின் மனைவியா?" அவர்...

அவள் சொன்னாள், "நான்தான்." அவள் கூறினாள், "நீங்கள் சகோதரர் பிரான்ஹாம். என்னை உங்களுக்கு நினைவில்லையா?"

நான் சொன்னேன், "நான் உங்களைப் பார்த் திருக்கிறேன் என்று நம்புகிறேன், சகோதரி."

அவள் சொன்னாள், "சரி, நாங்கள் பலமுறை சபைக்கு வருகிறோம்." சொன்னாள், "நிச்சயமாக நீங்கள் சென்றதிலிருந்து, எனக்குத் தெரியும்," சொன்னாள், "என் கணவர் உங்கள் சபையில் பிரசங்கித்திருக்கிறார்." மேலும் நான் சொன் னேன், "சரி, அதற்காக நான் நன்றி உள்ளவனாக இருக்கிறேன்." மேலும் அவள் கன்னங்களில்

கண்ணீர் உருண்டோட ஆரம்பித்தது. நான் நினைத்தேன், "சரி, இது... ஏதோ நடந்திருக்க வேண்டும்.

*13* எனவே அவள் சொன்னாள், "கண்ணியத்திற்குரிய பிரான்ஹாம்," சொன்னாள், "என் தாய் சுமார் ஒரு மணி நேரத்திற்கு முன்புதான் என்னை அழைத்தாள்." மேலும் சொன்னாள், "நீங்கள் எதைப் பார்த்தீர்கள், இன்று காலை என்ன நடந்தது என்பதை அவள் எனக்குக் கூறினாள்." அவள் சொன்னாள், "குழந்தை, நான் அதனுடன் இங்கே இருக்கிறேன்; எந்த நிமிடத்திலும் அது இறந்துவிடும் என்று அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்." மேலும் சொன்னாள், "நான்... அதற்கு என்ன பிரச்சனை என்று மருத்துவர்களுக்கே தெரியவில்லை." சொன் னாள், "எங்களுக்குத் தெரிந்த ஒரு விஷயம்; அதற்கு சர்க்கரை வியாதி இருந்தது." அதற்கோ வெறும் ஐந்து மாதங்கள்தான் ஆகிறது. மேலும் சொன்னாள், "அதற்கு சர்க்கரை வியாதி, அவர்கள் இன்னும் என்னவெல்லாம் கண்டு பிடித்தார்கள் என்பதை நான் மறந்துவிட்டேன்,

ஆனால் அதை அரை மயக்க நிலைக்கு ஆளாக்கியது எது என்று அவர்களுக்குத் தெரியவில்லை." மேலும் சொன்னாள், "நான் என் தாயிடம் பேசினேன். என் தாய் என்னிடம் சொன்னபோது," சொன்னாள், "என் குழந்தை பிழைக்கும் என்று என் இருதயத்தில் நான் அறிந்திருந்தேன்." சொன்னாள், "நான் திரும்பிப் பார்த்தபோது அது தன் குதிங்கால்களை உதைத்துக்கொண்டும், சத்தமிட்டுக்கொண்டும், சிரித்துக்கொண்டும் இருந்தது." சொன்னாள், "வாருங்கள், அதைப் பாருங்கள்." எனவே அவள் சொன்னாள், "அதை அனுப்பி வைக்க மருத்துவர் வருவதற்காக நான் காத்துக் கொண்டிருக்கிறேன்," ஜெபர்சன்வில்லேயைச் சேர்ந்த மருத்துவர் ரோபி.

எனவே நான் அங்கே உள்ளே சென்றேன், அந்தச் சிறுவன் தன் பாட்டிலை இப்படி உயர்த்தி வைத்து குடித்துக்கொண்டிருந்தான். அவன் என்னைப் பார்த்தான், அந்தப் பற்களில்லாத சிறிய வாய், அப்படிச் சிரித்து, தன் பாட்டிலை மீண்டும் தன் வாயில் வைத்துக்கொண்டான். அவனுடைய தாய் பாட்டிலை இழுக்க முயன்றாள். ஓ, இல்லை,

அவன் அதை மீண்டும் பிடித்துக்கொண்டான். மருத்துவர் உள்ளே வந்து அந்தக் குழந்தையைப் பரிசோதித்துவிட்டு, "அதை வீட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள். நான்... அதற்கு எந்தப் பிரச்சனையும் இல்லை" என்றார்.

பார்க்கிறீர்களா? பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலைப் பின்பற்றுவதே சிறந்தது. கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மை அமைதிப் படுத்தினால் மட்டுமே (பார்க்கிறீர்களா?), இப்படிப்பட்ட அவசரத்தில் இருக்கக் கூடாது. நம்மை அமைதிப்படுத்த வேண்டும். கர்த்தரிடமிருந்து வரும் ஒரு அழைப்பு என்பது நம்முடைய பத்தாயிரம் மனித முயற்சிகளை விட மேலானது. நம்முடைய முழு இருதயத்தோடும் அவரை விசுவாசிப்போம். அவர் மிகவும் அன்பானவர்.

14 இப்போது, இன்றிரவு, இது சனிக்கிழமை இரவு; நாளை காலை நீங்கள் சண்டே ஸ்கூலுக்குச் செல்ல எழுந்திருக்க வேண்டும். [சகோதரர் சொல்கிறார், "ஆம்பிலிஃபயரை இருப்பதைவிட இன்னும் சத்தமாக வைக்க முடியுமா? பின்னால் அமர்ந்திருப்பவர்களை

நினைத்து நான் ஆச்சரியப்படுகிறேன், பயப்படுகிறேன், அவர்களுக்குக் கேட்பது கொஞ்சம் கடினமாக இருக்கும்"] அந்த—அந்தப் பொறியாளர், இதை இயக்குபவர் யாராக இருந்தாலும் சரி...

இப்போது, இன்றிரவு படிப்பதற்காக ஒரு வேதப்பகுதிக்கு என்னுடன் நீங்கள் திரும்ப வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மேலும் இப்போது, தேவன் தமது வார்த்தையில் நம்மைச் சந்திப்பார் என்று நாங்கள் நம்புகிறோம். தேவன் தமது வார்த்தையில் இருக்கிறார் என்று நீங்கள் நம்புகிறீர்களா? எப்போதும்.

இப்போது, வழக்கமாக நாளை இரவு நம்முடைய கடைசி இரவாக இருக்கும். வழக்கமாக ஐந்து இரவுகள் தான் நாங்கள் தங்குவோம், மூன்று முதல் ஐந்து இரவுகள் வரை. ஆனால் கர்த்தருக்குச் சித்தமானால், அடுத்த வாரமும் நாங்கள் தொடர்ந்து செல்வோம், சரியாக. எனவே நாங்கள்... எல்லாவற்றையும் ஒரே விஷயத்தில் கொட்டி விடாமல் இருக்க முயற்சிக்க விரும்புகிறேன்.

கொஞ்சு நேரம் வார்த்தையைக் குறித்துப் பேசுவது எனக்கு மிகவும் ஆறுதலாக இருக்கிறது...

*15* எனவே இப்போது, எபிரெயர் புஸ்தகம் 10-ம் அதிகாரத்தில், வார்த்தையின் ஒரு பகுதியை வாசிக்க நாங்கள் விரும்புகிறோம். மேலும் இதைக் குறித்துப் பேச, ஓ, தேவன் சித்தமானால், இருபது, முப்பது நிமிடங்கள் மட்டுமே எடுத்துக்கொள்ளப் போகிறேன். இப்போது, இது முன்கூட்டியே திட்ட மிடப்பட்டது அல்ல; இந்த நேரத்தில் பரிசுத்த ஆவியானவர் எப்படி வழிநடத்துகிறாரோ அப்படி நடக்கும். இப்போது, வார்த்தையை வாசிப்பதை நான் நேசிக்கிறேன், ஏனென்றால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். மேலும் இதை நான் நேசிக்கிறேன், ஏனென்றால் இது நமக்கு அருளப்பட்ட தேவனுடைய வார்த்தை என்று எனக்குத் தெரியும். இங்கே பவுல் எபிரெயர்களுக்கு எழுதுகிறார் (இது பவுல்தான் என்று நாங்கள் நம்புகிறோம்)... இதை வாசிக்கிறார்:

**இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப் போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப் பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது. ("பூரணப்** *படுத்த" என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.)*

**பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிற வர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்டபின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி** *(அல்லது "விருப்பம்" என்பது ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாகும்.)* **அவர்களுக்கு இல்லா திருப்பதினால், அந்தப்பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா?**

**அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது.**

*இப்போது, 11-ம் வசனம்:*

**அன்றியும், எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும், பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்திசெய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்திவருகிறவனாயும் நிற்பான்.**

**இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து,**

**இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் காத்துக் கொண்டிருக்கிறார்.**

**ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப் படுத்தியிருக்கிறார்.**

*16 அப்போஸ்தலனாகிய பவுலின் இந்த அற்புதமான நிருபத்தின் அடிப்படையில், நாங்கள்—நம்புவது போல, இன்றிரவு சிந்திக்க விரும்புகிறோம். (எபிரெயர் புஸ்தகத்தை எழுதியது யார் என்று அறிஞர்களால் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை, ஆனால் அதை எழுதியது புனித பவுல்தான் என்று*

நம்புகிறோம்...) அதை எப்படிக் காட்ட அவர் முயற்சி செய்தார், அவர் ஏறக்குறைய பயன்படுத்திக் கொண்டிருந்தார்... அவர் இங்கே ஒரு முன்னடையாளங்களை விளக்குபவராக இருந்தார். நியாயப்பிரமாணம் எப்படி வருங்கால நன்மைகளின் நிழலாக இருந்தது, அது நிஜமான சாயலாகவோ அல்லது உண்மையான பொருளாகவோ இல்லை; அது வெறும் நிழலாக மட்டுமே இருந்தது என்பதை அவர் காட்ட முயற்சி செய்தார்.

மேலும் பலமுறை மக்கள் 23-ஆம் சங்கீதத்தை மேற்கோள் காட்டி, "அவர்கள்... நான் மரண இருளின் பள்ளத்தாக்கின் இருண்ட நிழல்களின் வழியாய் நடந்தாலும்" என்று சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். நீங்கள் கவனித்தால், அது இருண்ட நிழல்கள் அல்ல; அது நிழல். அதில் இருள் இல்லை. "மரண இருளின் பள்ளத்தாக்கின் நிழல்." இப்போது, அது இருட்டாகவும் அதே சமயம் நிழலைக் கொண்டிருப்பதாகவும் இருக்க முடியாது. ஏனென்றால், அது ஒரு நிழலாக இருப்பதற்கு முன்பாக அங்கு ஒரு குறிப்பிட்ட அளவு வெளிச்சம் இருக்க வேண்டும். அது

முழுமையாக இருட்டாக இருந்தால், அங்கு நிழல் இருக்காது. எனவே "நான் மரண இருளின் பள்ளத்தாக்கின் நிழலின் வழியாய் நடந்தாலும்."

இப்போது, ஒரு நிழலை உருவாக்குவதற்குப் போதுமான வெளிச்சம் இருக்க வேண்டும். இங்கே இருட்டாக இருந்தால், என் நிழல் இந்தப் பிரசங்க மேடையின் மீது விழாது. ஆனால் வெளிச்சம் இருப்பதால், அது ஒரு நிழலை உருவாக்குகிறது. பார்க்கிறீர்களா? எனவே மரணம் ஒரு வகையில் இருட்டானது, ஆனால் அது வெறும் ஒரு நிழல்தான். பார்க்கிறீர்களா? "மரண இருளின் பள்ளத்தாக்கு..." எனவே அதை ஒரு நிழலாக மாற்றுவதற்கு மரணத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு வெளிச்சம் இருக்க வேண்டும். பள்ளத்தாக்கில் வெளிச்சம் இருக்கிறது என்பது அப்படி இருப்பதற்காக நீங்கள் மகிழ்ச்சியடையவில்லையா?

17 ஒரு நாள் நாம் அனைவரும் அந்த வழியில் வரப்போகிறோம், நண்பர்களே. இன்றிரவு நாம் ஒவ்வொருவரும் அங்கே

செல்லும் பாதையில்தான் இருக்கிறோம். நம் இருதயம் துடிக்கும் ஒவ்வொரு முறையும், அது மீண்டும் துடிக்கப்போகும் தடவைகளில் ஒன்று குறைகிறது. இந்தப் பயணத்தில் அது இத்தனை முறைதான் துடிக்கும் என்று இருக்கிறது. சில... இந்த நாட்களில் ஒன்றில் அது தனது கடைசித் துடிப்பைத் துடிக்கும். அதன்பிறகு நாம் மரணத்தின் நிழல் வழியாகக் கீழே செல்ல வேண்டும். எனவே விடிவெள்ளி நட்சத்திரம் அங்கே நம்மைச் சந்தித்து பள்ளத்தாக்கிற்கு வெளிச்சம் கொடுத்து, நதியைக் கடக்க நமக்கு ஒரு—ஒரு ஒளியைக் கொடுக்கும் என்று வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருப்பதற்காக நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

நான் எப்போதாவது அந்த வழியில் வர வேண்டியிருக்கிறது. அதனால்தான் கர்த்தராகிய இயேசுவுக்காக என் முழு வாழ்க்கையையும், அவருக்காக நான் செய்யக்கூடிய அனைத்தையும் அர்ப்பணிக்க விரும்புகிறேன். மேலும் அவருடைய மக்களுக்குச் சேவை செய்வது போலவே என்னால் அவருக்கும் சேவை செய்ய முடியும். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பு கூருவதைப் போலவே உங்களால் அவரிடமும்

அன்புகூர முடியும். நான் உங்களை நேசிப்பது போலவும் நீங்கள் என்னை நேசிப்பது போலவும் மட்டுமே என்னால் அவரை நேசிக்க முடியும். மேலும் நாம் ஒன்றிணைந்து தேவனை நேசிக்கிறோம். நான் உங்களுக்குச் சேவை செய்யும்போதும், நீங்கள் எனக்குச் சேவை செய்யும்போதும், அதில் நாம் அவருடைய பிள்ளைகளாகிறோம். அப்படித்தான் நாம் தேவனுக்குச் சேவை செய்கிறோம். இயேசு, "மிகவும் சிறியோராகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" என்று சொன்னார். எனவே நாம் ஒரு ஆசீர்வாதத்தை விரும்பினால், மற்றவர் களுக்கு நாம் ஒரு ஆசீர்வாதமாக இருப்போம், அப்போது ஆசீர்வாதம் திரும்பி வரும். உங்கள் அப்பத்தைத் தண்ணீரின் மேல் போடுவதைப் போல, அது திரும்பி வரும். அது உண்மை தான். வாழ்க்கையின் எல்லாப் படிகளிலும் நீங்கள் அதைக் காண்பீர்கள். நீங்கள் எதை விதைக்கிறீர்களோ அதையே வழக்கமாக அறுவடை செய்வீர்கள். எனவே நாம் நன்மை செய்வோம். நல்லதைப் பேசுவோம், கனிவாக இருப்போம். மக்கள் நம்மைப் பற்றிப்

பேசும்போது, நாம் நல்ல காரியங்களையும் கனிவான காரியங்களையும் சொல்வோம். நாம் நல்லவைகளைக் கொடுத்தால், நல்ல காரியங்கள் நம் வழியில் வரும்.

*18* இப்போது, பவுல் இங்கே பள்ளத் தாக்கைப் பற்றிப் பேசுகிறார், அல்லது நிழல், மாறாக, நியாயப்பிரமாணம், வருங்கால நன்மைகளின் நிழலாக இருப்பதால், ஆராதனை செய்பவரை ஒருக்காலும் பூரணப்படுத்த முடியாது. பின்னர் பூரணம் என்றால் என்ன என்பதைக் காட்ட அவர் தொடருகிறார். இப்போது, இது மக்கள் அதிகம் நினைக்கும் ஒரு விசித்திரமான விஷயமாக இருக்கிறது; அவர்கள் சொல்கிறார்கள், "சரி, நான் பலவீனமாக இருக்கிறேன்; என் விசுவாசம் அவ்வளவு பெரிதல்ல; நான் ஒரு சிறந்த கிறிஸ்தவன் அல்ல." அதைத்தான் நீங்கள் சொல்ல வேண்டும் என்று பிசாசு விரும்புகிறான். அப்போது நீங்கள் அவனுடைய மொழியில்தான் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். பார்க்கிறீர்களா? நீங்கள் ஒருபோதும் அப்படிச் சொல்லக் கூடாது. உங்கள் சாட்சி ஒருபோதும்

எதிர்மறையாக இருக்க விடாதீர்கள்; அது எப்போதும் நேர்மறையாக இருக்கட்டும். "நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். என் இருதயத்தில் தேவன் இருக்கிறார். நான் அவரை என் முழு இருதயத்தோடும் நம்புகிறேன்." நீங்கள் தெய்வீக சுகமளித்தலை நம்புகிறீர்களா? "என் முழு இருதயத்தோடும்."

உங்களுடைய—உங்களுடைய சாட்சியும் உங்களுடைய எண்ணங்களும், எல்லாமே எப்போதும்... உங்களால் முடியுமானால் ஒரு எதிர்மறையான எண்ணம் உங்கள் மனதில் வர ஒருபோதும் அனுமதிக்காதீர்கள். அது தொடங்கும்போது, அதற்கு இடமளிக்காதீர்கள். சரி, நீங்கள் சொல்வீர்கள், "எண்ணங்கள் வருவதை என்னால் தடுக்க முடியாது." சரி, அது "பறவைகள் தன் இடத்தின் மேல் பறப்பதைத் தன்னால் தடுத்து நிறுத்த முடியாது, ஆனால் அவை தங்குவதை நிச்சயமாய்த் தடுத்து நிறுத்த முடியும்" என்று சொன்ன விவசாயியைப் போல இருக்கும். எனவே அது ஒரு—அது ஒரு நல்ல விஷயம். பார்க்கிறீர்களா? எண்ணங்கள் வரும்போது உங்களால் அவற்றைத் தடுக்க முடியாது, ஆனால்—ஆனால்—அவற்றிற்கு

இடமளிக்காதீர்கள்; அதைக் கடந்து செல்ல விடுங்கள். "இல்லை, ஐயா. இயேசு கிறிஸ்து என் இரட்சகர்; தேவனாலே சகலமும் என்னுடையவை. மேலும் நான்—நான் அவற்றைக் காத்துக்கொள்ளப் போகிறேன். நான் அவற்றைக் குறித்துச் சாட்சி சொல்லப் போகிறேன்."

அவர் உங்களுக்காக அதைச் செய்திருக்கிறார் என்று நீங்கள் அறிக்கையிடும்போது மட்டுமே தேவன் உங்களை ஆசீர்வதிக்க முடியும். பாருங்கள், அவர் நமது அறிக்கையின் பிரதான ஆசாரியராக இருக்கிறார். அது சரியா? எபிரெயர் 3. அவர் நமது அறிக்கையின் பிரதான ஆசாரியர் என்று அவர் சொன்னார். நாம் அதை ஏற்றுக்கொண்டு, விசுவாசித்து, அறிக்கையிடும் போது மட்டுமே அவரால் நமக்காகச் செயல்பட முடியும்.

ஓ, எப்படி... ஒருவேளை நாளை மதியம், தேவனுக்குச் சித்தமானால், கர்த்தராகிய இயேசுவை எப்படி ஏற்றுக்கொள்வது என்பது குறித்து இப்போது என் மனதில் மிகவும் வலுவாக இருக்கும் ஒரு விஷயத்திற்கு நான் வர விரும்புகிறேன். ஆனால் ஒருவேளை அது

நாளை மதியம் சண்டே ஸ்கூல் பாடத்தில் சிறப்பாக இருக்கும்.

19 இன்றிரவு நாம் நியாயப்பிரமாணத்தைக் குறித்து—குறித்து பேச விரும்புகிறோம். இப்போது, பழைய ஏற்பாட்டின் கீழ், பலர் நியாயப்பிரமாணம், அல்லது அந்த—அந்த இரத்தம் சிந்துதல் நியாயப்பிரமாணத்தில்தான் தொடங்கியது என்று நினைக்கிறார்கள். ஆனால் பாவத்திற்கான பலி நியாயப்பிரமாணத்திற்கு முன்பே இருந்தது. மேலும் அவர்கள் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியே கொண்டு வரப்பட்ட உடனே, ஆபேல் தேவனுக்கு ஒரு ஆட்டுக்குட்டியைப் பலியாகச் செலுத்தினான், அது கர்த்தராகிய இயேசுவின் முன்னடை யாளமாக இருந்தது.

இப்போது, ஆபேல் சென்று தன் ஆட்டுக்குட்டியைக் கொண்டுவந்தான், ஒரு கயிற்றைச் சுற்றினான், அல்லது கயிறு அல்ல... ஒருவேளை அந்தக் நாட்களில் கயிறு செய்ய சணல் என்றால் என்னவென்று அவர்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம் என்று நான் நினைக்கிறேன், ஆனால் ஒரு திராட்சைக்கொடி

என்று வைத்துக்கொள்வோம், அந்தச் சிறிய ஆட்டுக்குட்டியின் கழுத்தைச் சுற்றி அதைப் பலிபீடத்திற்கு, பாறைக்கு இழுத்துச் சென்று, கீழே கிடத்தி, இரத்தம் அதனுடைய சிறிய கம்பளியை நனைக்கத் தொடங்கும் வரையிலும் அது கத்திக்கொண்டும் மரித்துக்கொண்டும் இருக்கும் வரையிலும் ஒரு பாறையால் அதன் சிறிய தொண்டையில் அடித்தான்... ஒரு ஆட்டுக்குட்டி சாவதை நீங்கள் எப்போதாவது கேட்டிருக்கிறீர்களா? ஓ, நீங்கள் கேள்விப் பட்டதிலேயே அது மிகவும் பரிதாபமான ஒரு விஷயம். மேலும் அங்கே மரித்துக்கொண்டிருந்த அந்தச் சிறிய ஆட்டுக்குட்டி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை முன்னடையாளமாகக் காட்டியது. இப்போது, அது விசித்திரமாகத் தோன்றும்...

20 வேதத்தில் நீங்கள் எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா, இயேசு கொண்டு செல்லப்பட்டார். ஒரு சிறிய குழந்தையைப் போல அவர் ஏன் ஒரு வீட்டிலும் தொட்டிலிலும் பிறக்கவில்லை என்பதை நீங்கள் எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா, ஆச்சரியப் பட்டிருக்கிறீர்களா? அவர் ஒரு மாட்டுத்

தொழுவத்தில், ஒரு கொட்டகையில் பிறந்தார். ஆட்டுக்குட்டிகள் தொட்டில்களில் பிறப்ப தில்லை; அவை தொழுவங்களில்தான் பிறக் கின்றன. அவர் தேவ ஆட்டுக்குட்டியாக இருந்தார். மேலும் அவர்கள் வழி நடத்தினார்கள்... ஆபேல் தன் ஆட்டுக்குட்டியை வழிநடத்தினான், மற்றும் கிறிஸ்து கொண்டு செல்லப்பட்டார், அடிக்கப்படும்படி கொண்டு செல்லப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போல.

மேலும் ஆபேல் பலிபீடத்தில் ஆட்டுக் குட்டியை முன்னடையாளமாகப் பலியிட்ட போதும், அதன் கழுத்தில் அடித்தபோதும், அதனுடைய சிறிய இரத்தம், அதனுடைய நரம்புகள் வெளியே தள்ளப்பட்டு, இரத்தம் அதனுடைய சிறிய உடலின் மீது தெளிக்கப் பட்டு, அதனுடைய வெள்ளைக் கம்பளி சிவப்பு நிறத்தில் நனைந்தபோதும், அது கத்திக் கத்திக் கத்தி, பெலவீனமடைந்து, இறுதியாக அது துடிப்பதை நிறுத்தி மரிக்கும் வரையிலும்...

அது கல்வாரியில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை முன்னடையாளமாகக் காட்டியது, காயப்பட்டு, அவருடைய தலைமுடிகள்

இரத்தத்தால் நிறைந்து அவருடைய உடலின் மீது சொட்டிக்கொண்டிருக்க, ஆன்மீக விளக்கத்தினால் மட்டுமே விளக்கக்கூடிய ஒரு மொழியில் அவர் அழுதுகொண்டிருந்தார், "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" அவர் அந்நிய பாஷைகளில் பேசிக்கொண்டே மரித்தார், இயேசு அப்படிச் செய்தார். அவர் ஆபேலின் ஆட்டுக்குட்டியைப் போன்ற ஒரு மொழியைப் பேசும் ஒரு ஆட்டுக்குட்டியாக இருந்தார். அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை... ஆட்டுக்குட்டியைச் சிலுவையில் அறைந்த ஆபேலால், தன் ஆட்டுக்குட்டி என்ன சொல்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. மேலும் சிலுவையில் அறைந்தவர்களாலும் தேவ ஆட்டுக்குட்டி என்ன சொல்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் விளக்கத்தின்படி அது, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்பதாக இருந்தது. அனைத்தும் முன்னடையாளங்களில், ஆண்டுகள் முழுவதும் நிலைத்திருந்தன.

21 பழைய ஏற்பாட்டில் ஒரு மனுஷன் ஏதேனும் தவறு செய்தால், மீண்டும் நீதிமானாக்கப்படுவதற்கு அவன் இரத்தத்தின்— இரத்தத்தின் கீழ் வர வேண்டியதிருந்தது, ஏனென்றால் இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது. இன்று அது எவ்வளவு அழகாக, எவ்வளவு ஆச்சரியமாக நம்மிடம் வருகிறது. இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது. நீங்கள் எந்த சபையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்தப் பிரிவை, எந்த அமைப்பைச் சேர்ந்தவர்களாக இருந் தாலும், அல்லது உங்களுக்கு எவ்வளவு நல்ல தாயோ தகப்பனோ இருந்தாலும் பரவாயில்லை, இது ஒரு தனிப்பட்ட விஷயமாகும். இன்று ஒவ்வொரு ஆணும் அல்லது பெண்ணும் இரட்சிக்கப்படுவதற்கு, இறையியல் படிக்க வேண்டியதில்லை; அவர்கள் எந்தவொரு குறிப் பிட்ட வகையான ஜெபங்களையும் கற்றுக் கொள்ள வேண்டியதில்லை. அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம், ஆயத்தமாக்கப்பட்டிருக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிந்தப்பட்ட இரத்தத்தை ஏற்றுக்கொள்வது மட்டுமே. பின்பு, இரத்தஞ்சிந்துதலின் மூலமாகப் பாவமன்னிப்பு

வருகிறது, அல்லது பாவங்கள் மன்னிக்கப் படுகின்றன.

22 இப்போது, பழைய ஏற்பாட்டில் ஒரு பாவி தனக்காக ஒரு பலியைச் செலுத்த வரும் ஒரு அழகான காட்சி... அவன் பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியை (அது எப்படி இருக்க வேண்டும் என்பதை நாம் அனைவருமே முன்னடையாளமாக அறிவோம்) கண்டுபிடிக்க வேண்டும்; அது... அந்த—அந்தப் பாவநிவாரண பலியானது பழைய தாயாட்டிலிருந்து பிறந்த முதல் செம்மறியாட்டிலிருந்து—முதல் செம்மறி யாட்டிலிருந்து கொண்டுவரப்பட வேண்டும். மேலும் அது பழுதற்றதாக இருக்க வேண்டும். அது கொண்டுவரப்பட்டு, பலியிடப்பட்டு, மக்களின் பாவங்களுக்காக மரிக்க வேண்டும்.

கவனியுங்கள். பின்பு, ஒரு மனுஷன் ஏதேனும் தீமை செய்திருந்தால், விபசாரம் செய்திருந்தால், கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்கியிருந்தால், அல்லது கற்பனை களை மீறியிருந்தால், அவன் ஆட்டுக்குட்டியை ஆசாரியனிடம்—ஆசாரியனிடம் கொண்டு வந்தான். இப்போது முதலில்... தண்ணீர்

ஞானஸ்நானத்திற்கு முன்னடையாளமாக அந்த ஆட்டுக்குட்டி கழுவப்பட்டது, மற்றும் பல காரியங்கள் செய்யப்பட்டன. பின்பு அவன் ஆட்டுக்குட்டியைக் கொண்டுவந்து, தான் செய்ததை, தான் செய்த தீமையை ஆசாரியனுக்கு முன்பாக அறிக்கையிட்டான். அதன் பின்பு ஆசாரியன்... அது குறிக்கப்பட்டு புத்தகத்தில் எழுதப்பட்டது.

அந்த மனுஷன் அதே பாவத்தை ஒரு வருடத்தில் இரண்டு முறை செய்தால், அவன் இரக்கமின்றி மரித்தான். அவன் விபசாரம் செய்யும்போது பிடிபட்டு, ஆட்டுக்குட்டி ஒருமுறை பலியிடப்பட்டு, கிருபாசனத்தின்மேல் தெளிக்கப்பட்ட பாவநிவாரண பலியானது அவனுக்காகப் பிராயச்சித்தம் செய்து கொண்டிருக்கும்போது, அதற்காக அவன் வேறொரு ஆட்டுக்குட்டியைச் செலுத்த முடியாது. எபிரெயர் 10-ம் அதிகாரம் சொல்லுகிறது, “மோசேயினுடைய நியாயப் பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினால் சாகிறான்.” மேலும் 6-ம் அதிகாரம் சொல்லுகிறது, “தன்னைப் பரிசுத்தமாக்கின

உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்த மென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன்.” அவர்களால் அதைச் செய்ய முடியாது. வருஷத்தின் முடிவில் வேறொரு ஆட்டுக்குட்டி கொல்லப்படும் வரை, அது ஒரே தரம் செலுத்தப்படுவதாக இருக்க வேண்டும்.

23 இப்போது, நான் உங்களிடம் இதை ஒரு வழியாகக் கேட்கலாம், இதை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். எபிரெயர் 10-ம் அதிகாரத்தில், சுமார் 40-வது வசனத்தில், எங்கேயோ அங்கே, மன்னிக்கப் படாத பாவம் என்றால் என்ன என்று நீங்கள் எப்போதாவது நினைத்திருக்கிறீர்களா, அல்லது மக்கள் அதைப் பற்றிப் பேசுவதை நீங்கள் எப்போதாவது கேட்டிருக்கிறீர்களா என்று நான் உங்களிடம் கேட்க விரும்புகிறேன். மன்னிக்கப் படாத பாவம் என்பது ஒரு கருக்கலைப்பு நிகழ்வு என்று என் தாயார் எனக்குச் சொல்வது வழக்கம். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், குழந்தைகள் பிறப்பதற்கு முன்பே அவர்களை அழித்துவிடும் ஒரு பெண், குழந்தைகள் தங்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைப்பதற்கு முன்பே

அவர்களின் உயிரைப் பறிப்பதுதான் மன்னிக்கப்படாத பாவம் என்பது.

ஆனால் அது... பல வருடங்களாக நான் அதை நம்பினேன், ஏனென்றால் அது என் தாயாரால் எனக்குச் சொல்லப்பட்டது. அவர்கள் அதை... அவர்கள் அந்த நேரத்தில் ஒரு கிறிஸ்தவராக இருக்கவில்லை, எனவே அவர்கள் அதை அப்படித்தான் எடுத்துக்கொண்டார்கள்; அதுதான் அதைச் செய்வது என்று. மற்றவர்கள் அது கொலை செய்வது என்றார்கள்: கொலை செய்த ஒருவனுக்கு அதற்காக மன்னிப்பு கிடைக்காது என்று. பைபிளை நானே படித்த பிறகு, மனித உயிரைப் பறிப்பதற்கு மன்னிப்பு உண்டு என்பதை நான் கண்டுகொண்டேன்.

24 இப்போது, நினைவில் கொள்ளுங்கள், அம்மா, அது ஒரு பயங்கரமான காரியம்.

சமீபத்தில் ஒரு பெண் என் வீட்டிற்கு வந்தாள்; அவள், "ரெவரெண்ட் பிரான்ஹாம், எனக்குப் பைத்தியம் பிடிக்கப் போகிறது," என்றாள்.

நான், "என்ன பிரச்சனை?" என்றேன். குழந்தைகள் பிறப்பதற்கு முன்போ, அல்லது முழுமையாக வளர்ச்சியடைவதற்கோ, பிரசவ காலத்திற்கோ முன்பே, அவள் அழித்துவிட்ட அந்தச் சின்னஞ்சிறு குழந்தைகளின் உயிர்களைப் பற்றி அவள் என்னிடம் சொன்னாள். மேலும் அவள் சொன்னாள், "நான்... ஒவ்வொரு முறையும் நான் தனிமையில் இருக்கும்போது," அவள் சொன்னாள், "குழந்தைகள் என் காதுகளில் அழுவதை நான் கேட்க முடிகிறது." மேலும் அவள் சொன்னாள், "ஒவ்வொரு முறையும் நான் ஒரு கடிதம் அல்லது எதையாவது எழுத உட்காரும்போது, சிறிய குளிர்ந்த கைகள் என் தலைமுடியில் ஓடுவதை என்னால் உணர முடிகிறது."

"நீ எதை விதைக்கிறாயோ அதையே அறுப்பாய்." அதை நினைவில் கொள்ளுங்கள். சரியாக வாழுங்கள்; நேர்மையாக வாழுங்கள். தேவனுக்கு முன்பாக உங்கள் தவறுகளை அறிக்கையிடுங்கள், பின்பு அந்த வழியிலிருந்து விலகி, தேவனுடைய ஊழியர்களாகிய ஆணும் பெண்ணும் எப்படி நடக்க வேண்டுமோ, வாழ வேண்டுமோ அப்படி நடங்கள்.

ஆனால் அப்படியிருந்தும், அது மன்னிக்கப் படாத பாவம் அல்ல.

25 இயேசு, அவர் இங்கே பூமியில் இருந்தபோது... ஒரு நாள் அவர்கள் அவரிடம் ஒரு கூட்ட மனிதர்களைக் கொண்டு வந்தார்கள், அவர்கள், "பிசாசுகளின் தலைவனாகிய பெயல்செபூலினாலே இவன் பிசாசுகளைத் துரத்துகிறானே," என்றார்கள்.

அதற்கு இயேசு, "மனுஷகுமாரனுக்கு விரோதமாக ஒரு வார்த்தை சொன்னால் அது உங்களுக்கு மன்னிக்கப்படும். ஆனால் பரிசுத்தஆவிக்கு விரோதமாக ஒரு வார்த்தை பேசுகிற எவனுக்கும் இம்மையிலும் மறுமையிலும் அது மன்னிக்கப்படுவதில்லை," என்றார். பரிசுத்தஆவிக்கு விரோதமாகப் பேசுகிற எவனும்... ஏனென்றால் அவர்கள் அழைத்தார்கள்... பாருங்கள், பிராயச்சித்தம், அந்த இரத்த அணு, சிறிது நேரம் கழித்து நான் அதைச் சொல்வேன், அது இன்னும் வெடிக்கவில்லை, அதனால் அப்போது அது மன்னிக்கப்படலாம். பரிசுத்த ஆவியானவர் இந்த இரத்த அணுவில் இருந்து தன்னை

வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால் அங்கிருந்து ஒருமுறை வெளியே வந்த பிறகு, அது மன்னிக்கப்பட முடியாதது.

*26* இப்போது, பவுல் இதை எபிரெயர் *10:40*-லும் எடுத்தாளுகிறார் என்று நான் நம்புகிறேன், அவர் சொல்கிறார், “சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர் களாயிருந்தால், பாவங்களுக்காகச் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். மோசேயினுடைய நியாயப் பிரமாணத்தைத் தள்ளுகிறவன் (அவன் யாராக இருந்தாலும்) இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினால் சாகிறான். தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தமாக்கின உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் (அவன் ஊழியக் காரனாக இருந்தாலும், யாராக இருந்தாலும்) எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப்

பாத்திரவானாயிருப்பான்?" நான் வேதவாக்கியத்தை மேற்கோள் காட்டுகிறேன். இப்போது மீண்டும் ஆரம்பத்திற்குச் செல்வோம்.

"சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால்..."

இப்போது, இன்றிரவு இங்கே இரண்டு டஜன் போதகர்கள் பல்வேறு கட்ட விசுவாசங்களில் அமர்ந்திருக்கலாம் என்பதை நான் உணர்கிறேன் (ஒருவேளை இருக்கலாம்). என் அருமையான சகோதரர்களே, இதை நான் உங்களிடம் கேட்க விரும்புகிறேன், "பாவம் என்றால் என்ன?" பாவம் என்றால் என்ன என்பதை நாம் கண்டுகொண்டால், அதை நாம் மனப்பூர்வமாகச் செய்தால் அது என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியும். புகைபிடித்தல், குடித்தல், விபசாரம் செய்தல், காமவிகாரமாக வாழுதல், இந்தக் காரியங்கள் பாவம் அல்ல. அவை பாவத்தின் பண்புகளாகும். நீங்கள் ஒரு பாவியாக இருப்பதால் தான் அதைச் செய்கிறீர்கள்.

27 நான் ஒரு நியாயப்பிரமாணவாதி அல்ல; நான் ஒரு அர்மீனியனோ அல்லது கால்வினிஸ்டோ அல்ல. ஆனால் ஒவ்வொரு வருக்கும் ஒரு உபதேசம் இருந்தது என்று நான் நம்புகிறேன். ஆனால் அவர்கள் அதன் ஆழமான பக்கத்தில் ஓடிவிட்டார்கள். அவர்கள் அதிலேயே தங்கிவிட்டார்கள், அந்த காரியத்தை சமநிலைப் படுத்தவில்லை. ஒரு பெரும்பாதையும் ஒரு வழியும் இருக்கிறது, மேலும் அந்த வழிதான் சாலை. ஒரு பெரும்பாதைக்கு இங்கே ஒரு கம்பம் இருக்கிறது, அங்கே ஒரு கம்பம் இருக்கிறது, ஆனால் இந்தப் பெரும்பாதையின் நடுவே ஒரு சாலை வருகிறது. நீங்கள் ஒரு பெரும்பாதையில் இருக்கலாம், மேலும் ஒரு சாக்கடையிலும் இருக்கலாம். ஆனால் வழியில் இருங்கள். ஏசாயா சொன்னார், "அங்கே ஒரு பெரும்பாதையும் வழியும் இருக்கும்." "மேலும்" என்பது பெரும்பாதையை ஒரு வழிக்குக் கொண்டு வரும் ஒரு இணைப்புச் சொல்லாகும். இங்கேதான் நீங்கள் பயணம் செய்கிறீர்கள், அது வழியில்தான். வழியில்தான் சீரான ஓட்டம் இருக்கிறது.

பைபிளில் அதை எப்படி "வழி" என்று அழைத்தார்கள் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா? "இந்த வழியில்" காணப்பட்டவை எல்லாம். அது "ஒரு வழி" என்று அழைக்கப்பட்டது.

28 கவனியுங்கள். இப்போது, "மனப்பூர்வமாகப் பாவம் செய்கிறவன்..." இப்போது, பாவம் இதனுள் அடங்கியுள்ளது. இரண்டு கூறுகள் உள்ளன. அவற்றில் ஒன்று விசுவாசம். மற்றொன்று அவிசுவாசம். அவிசுவாசமே பாவம். அவிசுவாசம் என்ற ஒன்றுதான் பாவம். அதை யோசித்துப் பாருங்கள். அவிசுவாசம்... மத்தேயு... யோவான் 3-ல் இயேசு சொன்னார்: "விசுவாசியாதவனோ ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று." பார்க்கிறீர்களா? உங்களுக்கு ஒரு வாய்ப்பு இல்லை. இப்போது, பாதி கிறிஸ்தவர்கள் என்று யாருமில்லை. நீங்கள் ஒன்று விசுவாசியாக இருக்க வேண்டும் அல்லது அவிசுவாசியாக இருக்க வேண்டும்.

இப்போது, அதுதான் நம்பிக்கை. நம்பிக்கை என்றால் என்ன? விசுவாசம் என்றால் என்ன? "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதி

யும், காணப்படாதவைகளின் நிச்சயமுமா யிருக்கிறது.” இப்போது, நீங்கள் விசுவாசித்தால், நீங்கள் நீதியான வாழ்க்கையை வாழ்வீர்கள். நீங்கள் விசுவாசிக்காவிட்டால், நீங்கள் அரைகுறையான வாழ்க்கையை வாழலாம், அல்லது மாய்மாலம் செய்யலாம், வேறு வார்த்தைகளில் கூறுவதானால் ஒரு மாய் மாலக்காரனைப் போல நடிக்கலாம். அல்லது நீங்கள்—அல்லது நீங்கள் அப்படி இருப்பதாகப் பாசாங்கு செய்யலாம். ஆனால் நீங்கள் உண்மையாகவே ஒரு விசுவாசியாக இருந்தால், நீங்கள் ஒரு விசுவாசி என்பதை அறிந்துகொள்ள தேவன் ஒரு வழியை ஏற்படுத்தியிருக்கிறார். இப்போது, இயேசுவே சொன்னார், “விசுவாசிக் கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன; என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள், வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்குவார்கள்,” மற்றும் பல.

**29** இப்போது, இது உங்களுக்கு முன் வைக்கப்பட்டால்... இப்போது, பாருங்கள். “ஏனெனில் ஒருதரம் பிரகாசிக்கப்பட்டு, பரிசுத்தஆவியைப் பெற்றவர்கள், மறுபடியும்

விழுந்துபோனால் (பார்க்கிறீர்களா?) அது கூடாத காரியம். ஏனெனில் நாம் மனப் பூர்வமாகப் பாவம் (அவிசுவாசம்) செய்தால்...” அது உள்ளே இறங்கட்டும். “சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய் அவிசுவாசம் கொண்டால், பாவங்களுக்காகச் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல்.”

சுவிசேஷத்தின் சத்தியம் நீங்கள் அதைப் பார்க்க வேண்டிய விதத்தில் உங்களுக்கு முன்வைக்கப்பட்டு, புகழின் காரணமாகவோ, அல்லது வேறு எதனாலோ, நீங்கள் அதற்கு உங்கள் முதுகைக் காட்டிவிட்டு விலகிச் சென்று, அதைப் பார்க்க விரும்பவில்லை என்றால், அங்கேதான் நீங்கள் எல்லையைத் தாண்டு கிறீர்கள். “ஏனெனில், சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு மனப்பூர்வமாய் அவிசுவாசம் கொள்கிறவனுக்கு, பாவங்களுக் காகச் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல்.”

30 இப்போது, விசுவாசி அதனிடம் வந்து, கெஞ்சி, தன் ஆட்டுக்குட்டியைக் கொண்டு

வந்து கீழே வைத்தான். அவன் தன் பாவத்தை அறிக்கையிட்டான். இங்கே என்ன ஒரு அழகான முன்னடையாளம். பின்பு ஆசாரியன் அதன் தொண்டையை அறுத்தான். விசுவாசி தன் கைகளை மரித்துக்கொண்டிருக்கும் ஆட்டுக் குட்டியின் மீது வைத்தான். அவன் அதைப் பிடித்துக்கொண்டு, அந்தச் சிறிய ஜீவன் உதைப் பதையும், அதன் இரத்தம் பீறிடுவதையும், அதன் சிறிய தலை இழுத்துக்கொள்வதையும், அந்தச் சிறிய ஜீவன் கத்த முயற்சிப்பதையும், அது கத்தும்போது அதன் தொண்டையில் உள்ள கழுத்துநரம்பு அறுக்கப்பட்டு, மரித்து, துடி துடித்து, விரைத்துப் போவதையும் பார்த்த போது, பாவி தேவனை நோக்கிப் பார்த்து, "அது நானாக இருந்திருக்க வேண்டும். ஆனால் நான் இந்த ஆட்டுக்குட்டியை உமக்குச் செலுத்துகிறேன், அது எனக்குப் பதிலாக மரிக்கிறது," என்றான். தான் தேவனுடைய நியாயப்பிரமாணங்களை மீறிய குற்றவாளி என்பதை அறிந்துகொண்டு, ஆகையால் அவன் மரிக்க வேண்டும். "நீ அதைப் புசிக்கும் நாளில் சாகவே சாவாய்." அவன் தன் பாவங்களை அறிக்கையிட்டபோது, ஒரு குற்றமற்ற

ஆட்டுக்குட்டி அவன் இடத்தைப் பிடித்துக் கொண்டது, அவன் அந்த ஆட்டுக்குட்டியின் மீது தன் கைகளை வைத்து, அது அவனுக்குப் பதிலாக மரிப்பதை உணர்ந்தபோது, அவன் தன் மனசாட்சியில் தான் குற்றவாளி என்றும் ஆட்டுக்குட்டி குற்றமற்றது என்றும் அறிந்தான்; ஆனால் ஒரு குற்றமற்ற மாற்றுப் பலி அவனுடைய இடத்தைப் பிடித்துக்கொண்டது. பின்பு அவன் அதை அசட்டை பண்ணியிருந்தால், அல்லது அதற்கு அவமானம் செய்திருந்தால், அந்த வருடத்தின் முடிவில், அவன் இரக்கமின்றி மரிப்பான்.

*31* இப்போது, இன்றைய விசுவாசி வருவதற்கான ஒரு அழகான நிழலாட்டம், விசுவாசித்து, கிறிஸ்துவினுடைய தலையின் மேல் தன் கைகளை வைத்து, அங்கு பலிபீடத்திலோ அல்லது தன் இருக்கையிலோ, எங்கு அவர் கிறிஸ்துவை சந்திக்கிறாரோ, கல்வாரியில் அவர்மேல் தன் கைகளை வைத்து, அந்த வேதனையும் பாடுகளும் தனக்குரியவை என்பதை உணர்ந்து... உங்கள் ஆத்துமாவில் ஆழமான வருத்தமும் துயரமும் வருகிறது.

அவர்மேல் உங்கள் கைகளை வைக்கும்போது, நீங்கள் மாற்றப்படுகிறீர்கள். நீங்கள் ஒருபோதும் முன்போல இருக்க மாட்டீர்கள். அது உங்களி டமிருந்து ஆக்கினைத்தீர்ப்பை எடுத்துவிட்டது. அவன், நியாயப்பிரமாணத்தின் கீழ், அது ஒரு நிழலாக இருந்தபடியால், அந்த மனிதன் நீதிமானாக்கப்பட்டவனாய் சென்றான், ஆனால் இன்னமும் அதே இச்சையுடன் இருந்தான்.

அவன் விபசாரம் செய்யும்போது பிடிபட்டான் என்று வைத்துக்கொள்வோம், அவன் ஒரு ஆட்டுக்குட்டியை பலியிட்டான். ஆட்டுக்குட்டி அவனுக்குப் பதிலாக மரித்தது. அவன் எந்த இச்சையோடு உள்ளே வந்தானோ, தன் இருதயத்தில் அதே இச்சையோடு அந்த கட்டிடத்தை விட்டு நேராக வெளியே சென்றான். "காளை வெள்ளாட்டுக்கடா இவை களுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்யமாட்டாதே" என்று வேதம் சொல்கிறது. ஏனென்றால், அது வரப்போகிற நற்காரியங் களின் ஒரு நிழலாட்டமாக அல்லது நிழலாக மட்டுமே இருந்தது, ஏனெனில் மரிக்கும் மிருகத்தின், அதாவது அந்தப் பதிலாள்

மிருகத்தின் இரத்த அணுவிலுள்ள ஜீவன், ஒரு மிருகத்தின் ஜீவனாகவே இருந்தது.

*32* ஆனால் இந்த காரியத்தில்... இதோ கவனியுங்கள். இந்த காரியத்தில், அது மனிதனுடைய ஜீவன் மட்டுமல்ல, அது தேவனுடைய ஜீவனாய் இருந்தது. பரிசுத்த ஆவியானவரின் ரூபத்தில் கன்னிகையின் கர்ப்பத்தில் வந்த பூரணரான தேவன், சிருஷ்டிகர் தாமே தம்மை ஒரு இரத்த அணுவுக்குள் அடைத்துக்கொண்டார்... அவருக்கு பூமிக்குரிய தகப்பன் இல்லை. மரியாள் ஒரு மனிதனால் தொடப்படவில்லை. அவள் ஒரு கன்னிகையாக இருந்தாள். தேவன் தாமே அவள்மேல் நிழலிட்டார், வேறு வார்த்தைகளில் சொல்வதானால் களங்கமில்லாத உற்பவம், தேவன் தாமே ஒரு இரத்த அணுவை சிருஷ்டித்தார்.

ஜீவன் ஆணிலிருந்து வருகிறது, பெண்ணிலிருந்து அல்ல. பெண் ஒரு அடைக்காக்கும் கருவி (incubator) ஆவாள். ஆனால் ஜீவன் ஆணிலிருந்தே வருகிறது. ஜீவன் ஆணிலிருந்து வருமேயானால், இந்த இடத்தில் தேவன் ஒரு ஆணாக இருந்தார், பரிசுத்த

ஆவியானவர், தேவன் தாமே ஒரு ஸ்திரீயின் கர்ப்பத்தில் இறங்கிவந்து, தம்மைச் சுற்றி ஒரு இரத்த அணுவை உருவாக்கினார். ஓ, ஆச்சரியமே. அதை விசுவாசியுங்கள், உங்கள் குருடான கண்களுக்கு என்ன நடக்கிறது என்று பாருங்கள். அதை விசுவாசியுங்கள், உங்கள் புற்றுநோய்க்கு என்ன நடக்கிறது என்று பாருங்கள்.

தேவன் தாமே அங்கே சென்று, முதல் அணுவை சிருஷ்டித்தது போல சிருஷ்டித்த இந்த இரத்த அணுவில், தமக்கென ஒரு அணுவை சிருஷ்டித்துக்கொண்டார். அது ஜீவனைத் துளிர்க்கச் செய்து, குமாரனாகிய கிறிஸ்து இயேசுவைக் கொண்டுவந்தது. பாவத்தினாலும் ஆக்கினைத்தீர்ப்பினாலும், சிலுவையில் ஒரு ரோம ஈட்டி அவருடைய பரிசுத்த இருதயத்தை உருவக் குத்தினபோது, அந்த இரத்த அணுவை ஒரு நீர்த்திவலைகளாக உடைத்து, நடுச்சுவரைத் தகர்த்து, இரத்தம் சிந்தப்படுதலின் மூலமாக விசுவாசியை அவருடைய சொந்த சரீரத்திற்குள் கொண்டுவந்தது...

*33* இப்போது, ஒரு மிருகத்தின் மூலமாக இரத்தம் பூரணமானதாக இருக்க முடியாது. ஆனால் கிறிஸ்துவிலுள்ள இரத்தம் பூரண மானதாக இருந்தது. இப்போது, நான் ஒருபோதும் பூரணனாக இருக்கமாட்டேன். நீங்களும் ஒருபோதும் பூரணராக இருக்க மாட்டீர்கள். உங்கள் பார்வையில் நான் ஒருபோதும் பூரணனாக இருக்கமாட்டேன். என் பார்வையில் நீங்கள் ஒருபோதும் பூரணராக இருக்கமாட்டீர்கள். ஆனால் அதை நாம் ஒதுக்கி வைப்போம். தேவனுடைய பார்வையில் எப்படி? நான் உங்களை ஒரு மனிதராகப் பார்க்கிறேன். நான் உங்களை ஒரு சகோதரனாகப் பார்க்கிறேன். ஆனால் தேவன் தமது குமாரனுடைய இரத்தத்தின் மூலமாக உங்களை மீட்கப்பட்ட ஒருவராகப் பார்க்கிறார். இயேசு, "ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரணராயிருக்கக்கடவீர்கள்," என்று சொன்னார். இது நீங்கள் செய்த ஒன்றல்ல, இதற்கு தகுதியாக உங்களுக்கு எதுவும் இல்லை, ஆனால் கிறிஸ்து உங்களுக்காக செய்ததின் மூலமாகவே ஆகும்.

ஓ, நீங்கள் அதைப் பார்க்கிறீர்களா? "ஏனெனில்..." இந்தப் பலிகள் தொடர்ந்திருந்தால், நமக்கு வேறு எந்தப் பலியும் தேவைப்பட்டிருக்காது. "ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்டபின்பு..." அது உங்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதியட்டும். "ஆராதனைசெய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப் பட்டபின்பு, பாவங்களுண்டென்ற உணர்வு (அல்லது இச்சை) அவர்களுக்குப் பின்னும் இராதே." அவன் உண்மையாகவே சுத்தமாக்கப்பட்டிருந்தால்... ஒன்றைச் சுத்தமாக்குவது என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியும். அது சுத்தமாக்கப்பட்டிருந்தால்... விசுவாசி, ஒருதரம் சுத்தமாக்கப்பட்டபின்பு, அவனுக்குப் பாவத்தின்மேல் இனி இச்சை இல்லை. அது அப்படித்தான் இருந்திருக்க வேண்டும். ஆகவே, காளைகள் மற்றும் வெள்ளாட்டுக் கடாக்களின் இரத்தத்தால் அதைச் செய்ய முடியவில்லை, ஏனென்றால் வெள்ளாட்டுக் கடாக்கள், செம்மறியாடுகளின் இரத்த அணுவிலிருந்து வந்த ஜீவனும், தகன பலியும், ஒரு மிருக சிருஷ்டியாக சிருஷ்டிகரைச் சந்திக்கச் சென்ற ஜீவனாய் இருந்தது.

ஆனால் தேவ குமாரனுடைய இரத்த அணுவிலிருந்து வந்த ஜீவன், தேவன் தாமே தவிர வேறொன்றுமில்லை; அவர் கீழே இறங்கிவந்து, உலகத்தைத் தம்மோடே ஒப்புரவாக்கிக்கொள்ள கிறிஸ்துவுக்குள் இருந்த பெரிய யெகோவாவாகிய தேவன். அங்கே அது மனிதனாக இருந்தது, மனித ஜீவன் அல்ல, அது—அது தேவனுடைய ஜீவன். நாம் தேவனுடைய இரத்தத்தினாலே இரட்சிக்கப் பட்டோம் என்று வேதம் சொல்லுகிறது, ஏனென்றால் தேவன் ஒருவரே ஆண், தேவன் ஆவியாயிருக்கிறார். அது உண்மையாகவே பாலியல் ரீதியானதாக இருந்திருக்க முடியாது. அது இயற்கைக்கு அப்பாற்பட்டதாக வந்திருக்க வேண்டும். அதனால்தான் இன்று அவருடைய சபை இயற்கைக்கு அப்பாற்பட்டதை விசுவாசிக்கிறது.

34 தன் பாவங்களை அறிக்கையிட்டு, மரித்துக்கொண்டிருக்கும் ஆட்டுக் குட்டியான வராகிய கிறிஸ்துவின் தலையில் தன் கைகளை வைத்து, கல்வாரியைப் பார்க்கும் எந்தவொரு மனிதனும் இனி ஒருபோதும் முன்போல

இருக்கமுடியாது. அது சரிதான். "ஒரே பலியினாலே..." எபிரெயர் 10:14. "ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியி னாலே இவர் என்றென்றைக்கும் பூரணப் படுத்தியிருக்கிறார்," அல்லது ஆட்டுக்குட்டி யானவரின் இரத்தத்தால் சுத்திகரிக்கப் பட்டவர்களை.

பாவியே, அதைப் பாரு, அதை உற்று நோக்கு. நீங்கள், நிச்சயமாக... இன்னும் நல்லவராக மாற முயற்சிக்காதீர்கள்; உங்களால் நல்லவராக மாற முடியாது. நீங்கள் இருக்கிறபடியே வாருங்கள். நீங்கள் என்ன செய்தாலும், உங்களால் எதற்கும் தகுதியடைய முடியாது. நீங்கள் செய்யக்கூடிய ஒரே காரியம், பாவியை நீதிமானாக்குகிறவர் மேல் விசுவாசம் வைப்பதுதான். அதை நீங்கள் செய்யும்போது நீங்கள் இரட்சிக்கப்படுகிறீர்கள். ஓ, இயேசு என் இருதயத்திற்குள் வந்ததிலிருந்து, என் வாழ்க் கையில் எப்பேர்ப்பட்ட மாற்றம் உண்டா யிருக்கிறது; இயேசு என் இருதயத்திற்குள் வந்ததிலிருந்து, மேலான அந்த நகரத்தில் வாசம்பண்ண நான் அங்கே செல்வேன்.

இது எப்பேர்ப்பட்ட வித்தியாசத்தை ஏற்படுத்தியது. அது மிகவும் தாழ்ந்த நிலைக்கும், ஒரு வேசிக்கும் இறங்கி வருகிறது. அது குடிகாரனிடமும், சூதாடியிடமும், கோடீஸ் வரனிடமும், மேர்குடி மக்களிடமும், சபை உறுப்பினரிடமும் செல்கிறது. "விருப்பமுள் ளவன் ஜீவதண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்."

தேவனுடைய பெரிய திட்டத்தில் கவனியுங்கள், இயேசு உலகத் தோற்றமுதல் அடிக்கப்பட்ட தேவ ஆட்டுக்குட்டியாக இருக்கிறார்... அந்த பெரிய சிந்தனை ஒரு வார்த்தையாக மாறுவதற்கு முன்பாகவே தேவன் உணர்ந்தார்—உலகத் தோற்றத்திற்கு முன்பாகவே இந்தக் காரியங்களை முன்கூட்டியே சிந்தித்தார்.

ஏதேன் தோட்டத்தைப் பாருங்கள். தேவன் ஒருபோதும் நம்மை மரிப்பதற்காக இங்கே வைக்கவில்லை; அவர் வாழ்வதற்காகவே நம்மை இங்கே வைத்தார். அவர் ஒருபோதும் இறுதிச் சடங்குகளை நடத்துவதற்காக நம்மை இங்கே வைக்கவில்லை; என்றென்றைக்கும் களிகூர்ந்து, மகிழ்ச்சியான பிள்ளைகளாக

இருப்பதற்காகவே அவர் நம்மை இங்கே வைத்தார். பாவம் அந்தப் படத்தை சிதைத்துப்போட்டாலும், இயேசு கிறிஸ்துவின் மீட்பின் இரத்தம் அதைச் சுத்திகரிக்கிறது.

35 அறிக்கையிடப்பட்ட பாவத்திற்கு கிறிஸ்துவின் இரத்தம் என்ன செய்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் எப்போதாவது எடுத்திருக்கிறீர்களா... பெண்களே, நீங்கள் கற்பனை செய்து பாருங்கள், ஒரு சலவைத் தொட்டி முழுவதும் சலவைத்தூள் தண்ணீர் இருக்கிறது, அதில் ஒரு சிறிய கண் மருந்து விடும் குழாயில் முழுவதுமாக மையினை எடுத்து, இந்த மையை அந்த சலவைத் தொட்டி முழுவதுமுள்ள சலவைத்தூள் தண்ணீரில் விட்டால், மைக்கு என்ன ஆகும்? மை சலவைத்தூளாக மாறிவிடுகிறது. என்ன நடந்தது? அது சலவைத்தூளைச் சிறிதும் பாதிப் பதில்லை. அது அப்படியே உள்வாங்கப்பட்டு சலவைத்தூளாக மாறிவிடுகிறது. அதைத்தான் அறிக்கையிடப்பட்ட பாவம் செய்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத் தின்மேல் அது அறிக்கையிடப் படும்போது,

அது தன் நிறத்தை மாற்றி நீதியாக மாறி விடுகிறது. ஏனென்றால், நீங்கள் அதை ஒப்புக்கொண்டு, நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு தேவன் ஏற்பாடு செய்த வழியை ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிறீர்கள். இதைப்போல வேறொ ன்றும் இல்லை நண்பர்களே.

பழைய இரட்சணிய சேனை, "என் பாவத்தை கழுவுவது எது? இயேசுவின் இரத்தமேயன்றி வேறில்லை" என்ற பாடலைப் பாடியதில் ஆச்சரியமில்லை. சபையில் சேரு வதோ, ஒரு புதிய காரியத்தைத் தொடங் குவதோ, அல்லது எப்போதாவது சில புத்தகங்களை வாசிப்பதோ, அல்லது அது போன்ற ஏதோ ஒன்றோ அல்ல.

*இயேசுவின் இரத்தமேயன்றி வேறில்லை.*

*என்னை மறுபடியும் முழுமையாக்குவது எது?*

*இயேசுவின் இரத்தமேயன்றி வேறில்லை.*

*ஓ, பனிபோல் என்னை வெண்மையாக்கும் அந்த ஊற்று விலையேறப்பெற்றது;*

*வேறெந்த ஊற்றையும் நான் அறியேன்,*

*இயேசுவின் இரத்தமேயன்றி வேறில்லை.*

இன்று இரவு நான் அதை நினைக்கிறேன். அந்த மீட்பின் பாடலை நினைத்துப் பாருங்கள்:

*பல ஆபத்துகள், பிரயாசங்கள் மற்றும் கண்ணிகளைக் கடந்து*

*நான் ஏற்கனவே வந்துவிட்டேன்;*

*இதுவரை என்னைப் பத்திரமாக வழிநடத்தியது கிருபையே,*

*கிருபை என்னை மேலே கொண்டுசெல்லும்."*

**36** திரும்பவும் ஏதேன் தோட்டத்தில், ஒரு கணம் ஒரு படம் உங்கள் முன்பாக இருக்கிறது... தேவனுடைய சின்னஞ்சிறு பிள்ளைகளான ஆதாமும் ஏவாளும் தோட்டத்தில் ஓடி விளையாடுவதைப் பாருங்கள்: அழகானது, எந்த வியாதியும் இல்லை, மனவேதனைகள் இல்லை, தீங்கு செய்யவோ அழிக்கவோ எதுவுமில்லை, ஒருபோதும் முதுமையடையப் போவதில்லை. அன்று காலை ஆதாம் விழித்தெழுந்தபோது, தேவன் அவனு

டைய விலாவிலிருந்து எலும்பை எடுத்து ஒரு ஸ்திரீயை உருவாக்கியபோது... கிரேக்கக் கலைஞர்களும் உலகின் பல்வேறு கலைஞர்களும் ஏவாளின் படத்தைப் பயங்கரமான தோற்றமுடைய ஒரு மிருகத்தைப் போல வரைந்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். அது தவறு. சாதாரண, அன்றாட அறிவே அதற்கு மாறுபட்டதை உங்களுக்குத் தெரியப் படுத்தும். அப்படித் தோற்றமளிக்கும் யாரையும் எவரும் ரசிப்பதில்லை (அவர்கள் அப்படித் தோற்றமளித்தாலும் அவர்களால் ஒன்றும் செய்யமுடியாவிட்டாலும்), அவர்களுக்காகப் பரிதாபப்படுவார்கள்.

*37* ஆனால் தேவன் பூமியில் வைத்த பெண்களிலேயே ஏவாள் தான் மிகவும் அழகான பெண் என்று நான் நம்புகிறேன். அவள் அங்கே உட்கார்ந்திருப்பதை என்னால் காண முடிகிறது, அவளுடைய கண்கள் மேலே உள்ள நட்சத்திரங்களைப் போல, வானத்தைப் போல நீல நிறத்தில் மின்னுகின்றன; அவளுடைய நீண்ட கூந்தல் அவளுடைய முதுகுக்குப் பின்னால் தொங்குகிறது. பூமியிலேயே மிகவும்

பரிபூரணமான தோற்றமுடைய பெண், இதோ அவள் அங்கே இருக்கிறாள். தேவன் தம்மால் இயன்ற மிகச்சிறந்ததை ஆதாமுக்குக் கொடுத்தார்.

ஆதாம் அவளுடைய கையைப் பிடித்து, "இவள் என் மாம்சத்தின் மாம்சமும் என் எலும்பின் எலும்புமாய் இருக்கிறாள்," என்றான். ஏதேன் தோட்டத்தில் அவர்கள் கைகோர்த்து நின்றபோது, சர்வவல்லமையுள்ள தேவன் ஒரு ஜோடிக்கு திருமணம் செய்து வைத்த முதல் ஆராதனையை நடத்தினார். பிறகு அது ஒரு குடிகார நீதிபதியால் செய்யப்படலாம் என்றாலும், அது ஒரு பரிசுத்தமான மற்றும் புனிதமான காரியம். அது சரிதான். தேவன் முதல் ஆராதனையை நடத்தினார்.

[சகோதரர் அந்நிய பாஷைகளில் பேசுகிறார்]...?...

38 தேவனுடைய பெரிய பரிசுத்த ஆவியானவர், மக்களின் இருதயங்களில் அசைவாடி, அந்த ஏவாளையும் ஆதாமையும் மறுபடியும் அவர்களுடைய பரிபூரணத்திலும்,

தேவனுடைய பரிசுத்தத்திலும், தேவனுடைய பரிபூரணத்திலும் ஒன்றாக இணைக்கிறார்... இப்போது, என்ன நடந்தது? பாவம் உள்ளே வந்தது. பாவம் உள்ளே வந்தவுடனே என்ன நடந்தது? அது தேவனுடைய படத்தை சிதைத்துப்போட்டது. அது எவ்வளவு பயங்கரமான ஒரு காரியமாக இருந்தது.

பிறகு நீங்கள் கவனிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மனிதனின் இயல்பைக் காட்ட, ஆதாம் தான் பாவம் செய்ததை உணர்ந்தவுடனே, வெளியே வந்து அதை அறிக்கையிடுவதற்குப் பதிலாக, அவன் என்ன செய்தான் தெரியுமா? அவன் ஓடி ஒழிந்துகொண்டான். அதைத்தான் இன்று மனிதன் செய்கிறான். தனிநபர்கள் இன்று அதைத்தான் செய்கிறார்கள். தங்கள் பாவங்களை வந்து அறிக்கையிடுவதற்குப் பதிலாக, அவர்கள் தேவனை விட்டு ஓடி ஒழிந்துகொள்கிறார்கள். அதை மறைக்க முயற்சிப்பதற்குப் பதிலாக, எங்கும் உள்ள மனிதர்கள் இப்போது செய்ய வேண்டியது என்னவென்றால், வந்து தங்கள் பாவங்களை அறிக்கையிடுவதே ஆகும். நீங்கள் அதை நம்பவில்லையா?

ஆனால் அது என்ன? அது ஒரு இயல்பு. அவர்கள் இன்னமும் அதைச் செய்கிறார்கள். கவனியுங்கள். பிறகு தேவன் ஏதேன் தோட்டத்தின் வழியே சென்று, "ஆதாமே, ஆதாமே, நீ எங்கே இருக்கிறாய்..." என்று சத்தமிட்டார். என்ன நடந்தது? ஆதாம் ஒழிந்து கொண்டான். தேவனுக்கு முன்பாக நிற்பதற்காக அவன் தனக்கென ஒரு கச்சையை உண்டாக்கி அணிந்திருந்தாலும், அவன் தேவனுக்கு முன்பாக நின்றபோது அது கைகொடுக்கவில்லை.

இப்போது, தேவன் ஆதாமுடன் பேசுவதற்காக, அவனை மறுபடியும் தம்மிடம் கொண்டு வரும்படிக்கு, தேவன் வெளியே சென்று சில தோல்களை எடுத்து கச்சைகளை உண்டாக்கினார். அது சரிதானே? இப்போது, அவர் தோலை எடுத்தாரென்றால், தோலைப் பெறுவதற்கு ஏதோ ஒன்று மரித்திருக்க வேண்டும். பாருங்கள், அது ஒரு பதிலீடாக இருந்திருக்க வேண்டும். குற்றவாளியான மனிதனின் இடத்தை ஏதோ ஒன்று பதிலீடு செய்திருக்க வேண்டும். அவர் அங்கே கொன்ற அந்த ஆட்டுக்குட்டி கிறிஸ்து இயேசுவாக இருந்தார், அது ஒரு அடையாளமாகப் பேசியது.

அங்கே அவர் அந்த ஆட்டுக்குட்டியின் தோல்களைக் கொண்டுவந்து, அவற்றைப் புதர்களுக்குள் வீசினார், ஆதாமும் ஏவாளும் அவற்றை அணிந்துகொண்டார்கள். இதோ அவர்கள் பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நிற்பதற்காக வெளியே வருகிறார்கள்.

*39* இப்போது இங்கே பாருங்கள். இந்தப் படத்தைப் பாருங்கள். இன்று இரவு கிறிஸ்து வுக்கு வெளியே இருக்கிற நீங்கள் விசேஷமாக இதைப் பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர்கள் அங்கே இருக்கி றார்கள். அவர்கள் அங்கே ஆக்கினைக்குட் பட்டவர்களாய் நிற்கிறார்கள். தேவன் ஆதாமிடம், "நீ ஏன் இதைச் செய்தாய்?" என்று கேட்டார்.

எல்லா மனிதர்களையும் போல ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாற்ற முயற்சி செய்து, "நீர் எனக்குத் தந்த ஸ்திரீ" என்றான்.

ஸ்திரீ, "சர்ப்பம் என்னை வஞ்சித்தது" என்று சொன்னாள். ஒருவரிடமிருந்து மற்றொன்றுக்கு அதைக் கைமாற்றினார்கள்.

பிறகு தேவன் என்ன சொன்னார் என்று பாருங்கள். மாபெரும் யெகோவாவாகிய தேவன், அந்தப் புதர்களின் உச்சியிலுள்ள அந்த ஒளியின் சுழல் ஆதாமுடனும் ஏவாளுடனும் பேசுவதை என்னால் காண முடிகிறது. இதைப் பாருங்கள், அவர்கள் அதைச் செய்தபடியால் அவர் சொன்னார், "சர்ப்பமே, உன் கால்கள் போகும். உன் வாழ்நாளெல்லாம் நீ உன் வயிற்றினால் நகர்ந்து செல்வாய். வெறுக்கப் படுவாய். தூளே உனக்கு ஆகாரமாயிருக்கும். ஆதாமே, பூமி சபிக்கப்பட்டிருக்கும். முள்ளும் குறுக்கும் முளைக்கும், நீ நிலத்தைப் பண்படுத்த வேண்டும். உன் முகத்தின் வேர்வையினால் நீ உன் ஜீவனாம்சத்தைத் தேடுவாய். நான் உன்னை மண்ணிலிருந்து எடுத்தபடியால், நீ மண்ணுக்கே திரும்புவாய். ஸ்திரீயே, நீ உலகத்திலிருந்து ஜீவனை எடுத்தபடியால், நீ உலகத்திற்கு ஜீவனைக் கொண்டுவர வேண்டும். நான் உன் வேதனைகளை மிகவும் பெருகப்பண்ணுவேன், உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும்,

இதுபோன்று பல." அவை அனைத்தையும், பாவம், இனிமேல் அவர் தமது பார்வையில் அவற்றைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

இப்போது, இந்த அழகான சிறிய ஜோடியைப் பார்ப்போம்: ஆதாம், அவனுடைய பெரிய கம்பீரமான தோள்களுடனும், அவன் கழுத்தைச் சுற்றிலும் தொங்கும் அடர்த்தியான முடியுடனும், ஏவாள், ஒருவேளை அவளுடைய பொன்னிறக் கூந்தல் அவளுடைய முதுகுக்குப் பின்னால் தொங்க, அவளுடைய கண்கள் நீல நிறத்தில். ஆதாம் இப்போது அங்கே நிற்கிறான், அவனுடைய பெரிய தசைநார் கொண்ட உடம்பு நடுங்கித் தத்தளித்துக்கொண்டிருந்தது. என்ன? ஏதோ நடந்திருந்தது. இப்போது, அவனுடைய கன்னங்களில் உருண்டோடுவதைக் கவனி யுங்கள், கண்ணீர். இப்போது மரிக்கும் தன்மையுள்ளவனானான், அவன் மரிக்க வேண்டும். அவனுடைய கன்னங்களிலிருந்து கண்ணீர் ஏவாளின் தலையில் விழுந்து, அவளுடைய கண்ணீரோடு கலந்து அவளுடைய உடலின் மேல் வழிகிறது... பாவம் ஒரு பயங்கரமான காரியம். தேவன், "புறப்பட்டுப் போங்கள்" என்றார்.

40 இப்போது கவனியுங்கள், அவர்கள் ஏதேன் தோட்டத்தின் வழியே, தேவனுடைய சமுகத்தை விட்டு வெளியே நடந்து செல்வதை என்னால் காண முடிகிறது. அவர்கள் அங்கே செல்வதைப் பாருங்கள், அவனுடைய கால்களிலுள்ள அந்தப் பெரிய வலிமையான ஆண்பாலுக்குரிய தசைகள். அவன் விலகிச் செல்லத் தொடங்கும்போது, அவனுடைய கன்னங்களிலிருந்து கண்ணீர் உருண்டோடுகிறது, சிறிய ஏவாள் தன் கையை அவனைச் சுற்றிக் கோர்த்துக்கொண்டும், அவன் தன் கையை ஏவாளைச் சுற்றிக் கோர்த்துக்கொண்டும், அவர்கள் நடந்து செல்லும்போது அழுது கொண்டே, தேவனுடைய சமுகத்தை விட்டு வெளியேறுகிறார்கள்... அவருடைய சமுகத்தை விட்டு அகலும் ஒவ்வொரு பாவியும் இதையேதான் செய்வான்.

பிறகு அவர்கள் அந்த வழியே நடக்கத் தொடங்கியதும், கவனியுங்கள், அந்தப் பழைய செம்மறியாட்டுத் தோல்கள் ஆதாமின் பெரிய கால்களில் மோதித் துள்ளுவதை என்னால் கேட்க முடிகிறது [சகோதரர் பிரன்ஹாம்

கைதட்டுகிறார்] அவன் நடந்து, விலகி, வெளியேறி, தேவனை விட்டுப் புறப்பட்டுச் செல்லும்போது அவை அவனுடைய கால்களில் அடிபடுகின்றன.

41 அப்போது என்னால் தேவனை கேட்க முடிகிறது, அவரை உருவாக்குகிற அந்த மாபெரும் நித்தியம் முழுவதையும், எல்லா விண்வெளியையும், எல்லா ஒளியையும் (கேட்க முடிகிறது). அவையெல்லாம் நான்கு எழுத்துக் களில் சுருங்குவதை என்னால் காண முடிகிறது: l-o-v-e (அ-ன்-பு). அது ஒன்றுதான், இன்றிரவு நமக்கு இருக்கிற ஒரே நம்பிக்கை, தேவனின் அன்பில்தான் இருக்கிறது. இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை, ஒரு கவிஞர் இப்படிச் சொன்னார்:

*ஓ, தேவனின் அன்பு, எவ்வளவு வளமானது, எவ்வளவு தூய்மையானது!*

*எவ்வளவு ஆழமானது, எவ்வளவு வலிமையானது!*

*அது என்றென்றைக்கும்...*

*...பரிசுத்தவான்கள் மற்றும் தேவதூதர்களின் பாடல்களாகும்.*

தேவனின் அன்பு என்றால் என்ன என்பதை உங்களால் எழுதிவிடவோ அல்லது எதைக் கொண்டும் அளவிடவோ முடியாது. அது ஏதேன் தோட்டத்தில் அன்பினால் விலைக்கு வாங்கப்பட்டது. அவர் சொன்னார், "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்."

42 சில நிமிடங்களுக்கு நமது காட்சியை மாற்றுவோம். நான்காயிரம் ஆண்டுகளுக்குப் பிற்பாடு எடுத்துக்கொள்வோம். எருசலேமுக்குள் செல்வோம். அது ஒரு காலை நேரம்; சுமார் எட்டு மணி இருக்கும். வெளியே ஒரு சத்தம் கேட்கிறது. நாங்கள் எல்லாரும் பேசிக் கொண்டிருக்கிறோம். என்ன நடக்கிறது? ஓ, ஏதோ பெரும் அமளி நடக்கிறது, சிலர் சீறுகிறார்கள், சிலர் அழுகிறார்கள், சிலர் கேலி செய்கிறார்கள். நாம் போய் திரையை விலக்கி வெளியே பார்ப்போம், அங்கே என்ன இருக்கிறது என்று பார்ப்போம். ஏன்,

பாருங்கள், தெருவில் கீழே ஒரு மனிதர் வருகிறார். மேலும் அவர்—இரண்டு குற்றவாளிகள் அவரைப் பின்தொடர்ந்து வருகிறார்கள். அவர் தன் முதுகில் ஒரு சிலுவையைச் சுமந்து வருகிறார். "சரி, அது யார்?" என்று மாடியில் என்னுடன் இருப்பவர்களிடம் நான் கேட்கிறேன்.

அவர்கள் சொல்கிறார்கள், "அவர்தான் அந்த நசரேயனாகிய இயேசு, அந்த ஏமாற்றுக்காரர், அந்த தெய்வீக சுகமளிப்பவர், நமது சபைகளைக் கலக்கி, அவற்றுக்கு தொந்தரவு கொடுப்பவர், ஆசாரியர்கள் நம்பாத காரியங் களைப் போதிக்கிறவர். அவர்தான் அது. அவர்கள் அவரை கல்வாரிக்குக் கொண்டு செல்கிறார்கள். அவரைச் சிலுவையில் அறையப் போகிறார்கள்."

அவர் வாசலை விட்டு வெளியே சென்றபோது, அந்த பெரிய பழைய கூழாங்கற்களின் மேல், அந்த சிலுவை அவர் தோளில் மேலும்கீழுமாக இடித்துக் கொண்டிருந்தது... அவர்கள் அவரை அப்படி வெளியே கொண்டு சென்றபோது, நான்

கவனித்தேன், அவர் தையல் இல்லாமல் முழுவதும் நெய்யப்பட்ட ஒரே ஒரு அங்கி அணிந்திருந்தார், அந்த அங்கி முழுவதும் சிறிய, மிகச்சிறிய சிவப்பு புள்ளிகள் வந்தன. அது புள்ளிப்புள்ளியாக இருக்கிறதா? அதுவா அதன் இயற்கையான நிறம்? இல்லை, அது வெள்ளையாக இருந்தது. ஏன் அந்த சிறிய சிவப்பு புள்ளிகள்? அவற்றை நாம் கவனிப்போம். அவர் கல்வாரியை நோக்கிப் போகப் போக, அந்த சிறிய புள்ளிகள் பெரிதாக, பெரிதாக, பெரிதாகத் தொடங்கின. சிறிது நேரம் கழித்து அவையெல்லாம் ஒன்றாக இணைந்து ஒரு பெரிய சிவப்பு கறையாக மாறியது. அது என்ன? இரத்தம்.

*43* அங்கே கல்வாரியை நோக்கி அவர் மேலே செல்லத் தொடங்கும்போது, ஏதோ ஒரு சத்தம் கேட்பதை என்னால் உணர முடிகிறது [சகோதரர் பிரன்ஹாம் கைதட்டுகிறார்]. அது என்ன? இரண்டாவது ஆதாம், மீட்பர், ஒரு நீதிமானின் இரத்தம், நமது பாவங்களை மூடுவதற்காக பாவிக்காக இரத்தம் சிந்துகிறார். நாமோ அதை அவர் மீதே துப்புகிறோம். நாம் நம் தலைகளை ஆட்டி, "மதத்தைப்

பொறுத்தவரை நான் என் சொந்த வழியைக் கொண்டிருப்பேன். எனக்கு என் சொந்த மதம் இருக்கிறது, எனக்கு அந்த விஷயங்கள் தேவையில்லை" என்று சொன்னோம். அது இல்லையென்றால் நீங்கள் தொலைந்து போனீர்கள், நம்பிக்கையற்றவர்களாக, தேவனற்றவர்களாக, கிறிஸ்துவற்றவர்களாக, இந்த உலகத்தில் மரித்து, ஒரு பாவியின் கல்லறைக்கும் பிசாசின் நரகத்திற்கும் செல்கிறீர்கள், அது இல்லையென்றால்.

தேவன் உங்களுக்காக ஒரு ஆயத்தத்தைச் செய்தார். அந்தச் சிலுவையைச் சுமந்துகொண்டு அவர் மலையின் மேல் ஏறிச் செல்வதை என்னால் காண முடிகிறது, அவர் மலைமேல் ஏறிச் செல்லும்போது அவருடைய சிறிய பலவீனமான உடல் தள்ளாடுகிறது. உங்களுக்குத் தெரிந்த முதல் காரியம், அது அவரைச் சுற்றி சுழன்றுகொண்டிருந்தது; மரணம் அவரைக் கடுமையாகக் கடித்துக்கொண்டிருந்தது, அவரோ தன் முதுகில் ஒரு சிலுவையுடன் தொடர்ந்து சென்றுகொண்டிருக்கிறார், அதோ அங்கே கல்வாரியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார். என்ன? அவர் அப்படிச் செய்ய வேண்டி

யிருந்ததாலா? இல்லை, ஏனென்றால் அன்பு அவரை அதற்குச் செலுத்தியது.

44 அங்கே, அதை நினைத்துப் பாருங்கள். அவர்கள் சொன்னார்கள், "அவன் தன்னைத் தானே... மற்றவர்களை... மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை." அது ஒரு பாராட்டு. அவரால் மற்றவர்களையும் தம்மையும் இரட் சிக்க முடியவில்லை. நீங்கள் எப்போதாவது அதைக் குறித்துச் சிந்தித்திருக்கிறீர்களா? அவரே பிதாவாக இருந்தார். ஆமென். அவர் பலியாக வந்த பிதாவாகிய தேவன். அதனால்தான் நான் அந்தப் பாடலை நேசிக்கிறேன், சகோதரரே. நீங்கள் அவரை ஒரு தீர்க்கதரிசியாக மட்டும் ஆக்க முயற்சிக்கும்போது... அவர் ஒரு தீர்க்கதரிசியை விட மேலானவர்; அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன்.

அவரால் ஏன் முடியவில்லை... பன்னிரண்டு லேகியோன் தூதர்களை தம்மால் பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர் சொன்னார். ஏன் அவர் அவர்களை அழைக்கவில்லை? அவரால் முடியவில்லை. அதனால்தான் அவருடைய

சொந்தப் பிள்ளைகளே அவருடைய இரத்தத் திற்காகக் கதறிக்கொண்டிருந்தார்கள். உங்கள் சொந்தப் பிள்ளைகள் உங்கள் இரத்தத்திற்காகக் கத்துவதை உங்களால் கற்பனை செய்ய முடியுமா? அவர் அவர்களைக் கண்டனம் செய்தால், அவர் தமது சொந்தப் பிள்ளை களையே கண்டனம் செய்கிறார். அவர் சொன்னார், "பிதாவுக்கு முன்பாக நான் உங்களைக் குற்றப்படுத்தமாட்டேன்." அவர் சொன்னார், "தேவனுக்கு முன்பாக உங்களைக் குற்றப்படுத்துகிறவனும் உங்கள்மேல் குற்றஞ் சாட்டுகிறவனும் ஒருவன் இருக்கிறான்; அது மோசேதான்; அவனிடத்தில் நீங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள்." அவர் அவர்களைக் குற்றப் படுத்தவில்லை. அவர் சொன்னார், "பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே."

45 அந்த மரணத்தின் கூர் அவரைச் சுற்றி ஒரு தேனீயைப் போல கடிப்பதை என்னால் காண முடிகிறது, இங்கே அவரைக் கொட்டு கிறது, அங்கே அவரைக் கொட்டுகிறது. அவர் ஒரு குற்றவாளியாக மரித்துக்கொண்டிருந்தார். அவர் பாவம் அறியாதவர், ஆனால் உலகத்தின்

பாவங்கள் அனைத்தும் அவர் மீது இருந்தன. ஒவ்வொரு பாவக் கறையும், பாவத்திற்கான ஒவ்வொரு தண்டனையும், ஒவ்வொரு கண்ணீர்த் துளியும், ஒவ்வொரு மனவேதனையும், ஒவ்வொரு ஏமாற்றமும் அவருடைய தோள் களின் மேல் தங்கியிருந்தன. அந்த கூர் சுற்றிக்கொண்டே இருந்தது. அவர் ஏன் தேவனாக இருந்தார்? மரணத்தின் கூரை ஏற்றுக்கொள்வதற்காக அவர் மாம்சமாக வேண்டியிருந்தது.

உங்களுக்கு தேனீயைத் தெரியும்... தேனீ என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியும். ஒரு தேனீக்கு ஒரு கொடுக்கிறுக்கிறது. அந்தத் தேனீயால் கொட்ட முடியும். ஆனால் அந்தத் தேனீ எப்போதாவது ஒருமுறை அந்தக் கொடுக்கை ஆழமாகப் பதித்துவிட்டால், அதுதான் அந்தக் கொட்டுதலின் முடிவு. அது விலகிச் செல்லும்போது, கொடுக்கை அங்கேயே விட்டுவிடுகிறது. மரணம் அதற்குள் ஒரு கொடுக்கைக் கொண்டிருந்தது, அதுவரை ஒரு பயமும் இருந்தது. ஆனால் மாம்சமான தேவனாகிய இயேசு கிறிஸ்துவை அந்த மரணத் தேனீ கொட்டியபோது, அவர் மரணத்தின்

கொடுக்கை ஆழமாகப் பதித்துவிட்டார். இப்போது அந்தத் தேனீயில் கொடுக்கு இல்லை. மரணத்தால் ஒரு விசுவாசியைக் கொட்ட முடியாது. இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை, பரிசுத்த பவுல் சொன்னார், "மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்."

46 ரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை. நியாயப்பிரமாணம் வரப்போகிற நன்மைகளின் நிழலாய் இருக்கிறபடியால்... நியாயப்பிரமாணத்தின் கீழ் மரித்த ஒவ்வொரு ஆட்டுக்குட்டியும் கல்வாரியில் உள்ள தேவ ஆட்டுக்குட்டியையே சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தது. அந்தத் தெய்வத்துவத்தின் உயிர்த்தெழுதலின் வல்லமையின் மூலமாகவே, அவருடைய சரீரத்தை எழுப்பினார், ஏனென்றால் அது அதைத் தன் வசத்தில் வைத்திருப்பது சாத்தியமில்லாததாக இருந்தது. ஏனெனில் தாவீது ஆவிக்குள்ளாகச் சொன்னார், "என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்."

ஆகையால், அவர் நமது நீதிமானாக்கப் படுதலுக்காக மூன்றாம் நாளில் உயிர்த் தெழுந்தார், பிதாவின் வாக்குத்தத்தத்தை வாக்குப்பண்ணி, "உலகம் பெற்றுக் கொள்ளக் கூடாத சத்திய ஆவியாகிய பரிசுத்த ஆவியானவரை நான் உங்கள் மேல் அனுப்புவேன், அவர் என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருப்பார்."

இன்றிரவு ஆசீர்வதிக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவர் இந்த கட்டிடத்தில் இருக்கிறார், ஏதேன் தோட்டத்திலிருந்து மரித்த ஒவ்வொரு ஆட்டுக்குட்டியின் நிஜமாக (Antitype) இருப்பவரின் உயிர்த்தெழுதலின் வல்லமையில் இருக்கிறார்: "இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றென்றைக்கும் மாறாதவராயி ருக்கிறார்." கிறிஸ்து பாவங்களுக்காக மரிக் கிறார், வியாதிக்காக மரிக்கிறார்... தேவனின் இரக்கத்திற்காகவும் அவருடைய நன்மைக் காகவும் அவர் என்றென்றைக்கும் ஸ்தோத்தி ரிக்கப்படுவாராக.

*47* அவரே அதே தேவன், சகோதரியே, அங்கே அமர்ந்திருக்கும் உங்களை அந்த

வெரிகோஸ் வெயின்ஸ் (varicose veins) வியாதியிலிருந்து சுகமாக்கக்கூடியவர். நீங்கள் அதை நம்புகிறீர்களா? நீங்கள் அதை ஏற்றுக் கொள்வீர்களா? அப்படியென்றால், உங்கள் கால்களில் எழுந்து நின்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சுகமடையுங்கள். உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி. தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல.

அங்கே ஒரு முதிர்ந்த வயதுடைய பெண்மணி அமர்ந்திருக்கிறார், ஒரு முதிர்ந்த வயதுடைய கறுப்பின கிறிஸ்தவப் பெண்மணி என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறார், நீங்கள் சொல்லலாம், படிக்காத ஒரு கறுப்பினப் பெண்மணி என்று. ஆனால் தேவனின் கிருபை அவரோடு இருக்கிறது. அவருடைய வலது மார்பில் ஒரு புற்றுநோய் இருக்கிறது, அதுதான் பிரச்சினை. அது சரியா, அம்மா, அங்கே அமர்ந்திருக்கிறீர்களே? உங்கள் மார்பில் உள்ள அந்தப் பிரச்சினையான புற்றுநோயிலிருந்து தேவன் உங்களைச் சுகமாக்குவார் என்று நம்பு கிறீர்களா? நீங்கள் அதை முழு இருதயத்தோடும் நம்புகிறீர்களா? நீங்கள் நினைக்கிறீர்களா...

அவருக்குச் சரியாகப் பின்னால் இன்னொருவர் அமர்ந்திருக்கிறார், அவருக்கு மூக்கு மற்றும் வாய் சம்பந்தமான பிரச்சினை இருக்கிறது. தேவன் உங்களை அதிலிருந்து குணமாக்குவார் என்று நம்புகிறீர்களா? நீங்கள் செய்ய வேண்டிய ஒரே காரியம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதுதான், அவரை உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிப்பதுதான். நீங்கள் கேட்பதை எதையும் பெற்றுக்கொள்வீர்கள்.

48 அன்பானவரான கிறிஸ்து மரித் தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். அவர் இன்றிரவு இங்கே இருக்கிறார். இந்தக் காரியங்களைச் செய்துகொண்டு இங்கே இருப்பது என்ன? இப்போது அது இங்கே ஒரு பால் நீரோடையைப் போல தொங்கிக் கொண்டி ருக்கும் போது, ஒவ்வொரு இரவிலும் இருதயத்தின் இரகசியங்களை அறிந்து, பார்வை யாளர்களிடமிருந்து மக்களை அழைக்கக்கூடியது என்ன? அது என்ன? அது கல்வாரியில் உடைத்துத் திறக்கப்பட்ட இரத்த அணுவில் இருந்த அதே ஜீவன்.

இம்மானுவேலின் நரம்புகளிலிருந்து இழுக்கப் பட்ட,

இரத்தத்தால் நிரம்பிய ஒரு ஊற்று,

பாவிகள் அந்த வெள்ளத்தின் கீழ் மூழ்கும்போது,

தங்கள் குற்றக் கறைகள் அனைத்தையும் இழக்கிறார்கள்.

மரித்துக்கொண்டிருந்த கள்ளன் தன் நாளில்

அந்த ஊற்றைக் கண்டு மகிழ்ந்தான்;

அவனைப் போலவே நானும் கேடானவனாக இருந்தாலும்,

என் பாவங்கள் அனைத்தையும் அங்கு கழுவுவேனாக.

அவருடைய வழியும் காயங்கள் கொடுத்த அந்த நீரோடையை

விசுவாசத்தினால் நான் பார்த்தது முதல்,

மீட்கும் அன்பு என் கருப்பொருளாக இருந்து வருகிறது,

*நான் மரிக்கும் வரை அப்படியே இருக்கும்.*

*பிறகு ஒரு மேன்மையான, இனிமையான பாடலில்,*

*இரட்சிக்கும் உம்முடைய வல்லமையைப் பாடுவேன்,*

*திக்கும், திக்கிப்பேசும் இந்த ஏழை நாவு*

*கல்லறையில் மௌனமாக இருக்கும்போது.*

ஓ, பாவியான நண்பனே, பின்வாங்கிப் போனவனே, வெதுவெதுப்பானவனே, இதுவரை அந்த இரத்தத்தின் வழியாகச் செல்லாதவர்களே, இன்றிரவு நீங்கள் வர விரும்பவில்லையா? உங்களுக்காக இப்போது ஒரு ஊற்று திறக்கப் பட்டிருக்கிறது. நீங்கள் வர விரும்ப மாட்டீர்களா? சர்வவல்லமையுள்ள தேவன் இங்கே எழுந்து நின்று, ஏபிசி (ABC) கூட சரியாகத் தெரியாத, பிரசங்க மேடைக்கு வருவதற்கு முன்பு பைபிளை வாசிக்கப் பயிற்சி எடுக்க வேண்டிய ஒரு ஏழை அறியாத உழவனைப் பயன்படுத்த முடியுமானால், ஆயினும் என்னை நேசிப்பவருக்குக் கீழ்ப்படிந்த

இருதயத்துடன் இருக்கும்போது, அதே வழியின் மூலமாக அவர் அங்கே தம் வல்லமையைக் காண்பிப்பார். குருடரைப் பார்க்கும்படியும், செவிடரைக் கேட்கும்படியும், முடவரை நடக்கும் படியும் செய்து, அவர் இங்கே இருந்தபோது செய்த அதே வடிவத்தில் தம்முடைய பரிசுத்த ஆவியானவர் செயல் படுகிறார் என்பதை நிரூபிப்பார், ஏனென்றால் நான் அவரை விசுவாசிக்கிறேன் மற்றும் அவரை நேசிக்கிறேன். நாம் நமது தலைகளைத் தாழ்த்தும்போது, இன்றிரவு அவர் உங்களை இரட்சிப்பார் என்று நீங்கள் நம்புங்கள்.

49 சர்வவல்லமையுள்ள தேவனே, பிதாவே, இங்கே தேவையிலிருப்பவர்கள் மேல் இன்றிரவு இரக்கமாயிரும். இயேசுவின் நாமத்தின் மூலமாக அதை அருளும், கர்த்தாவே. இங்கே அநேகர் வியாதியுற்றும் துன்பப்பட்டும் இருக்கிறார்கள். நீர் அவர்களைச் சுகமாக்கும்படி நாங்கள் ஜெபிக்கிறோம். கர்த்தாவே, இங்கே அநேகர் தொலைந்துபோயிருக்கிறார்கள், ஓ, ஆவிக்குரிய ரீதியில் வியாதியாயிருக்கிறார்கள். அவர்கள் சபைக்குச் சபைக்கும், இடத்திற்கு இடத்திற்கும் அலைந்து திரிந்து, சமாதானத்தைக்

கண்டுபிடிக்க முயற்சி செய்து, ஜெயங்கொள்ள முயற்சிக்கிறார்கள். அவர்களால் அதைச் செய்யவே முடியவில்லை என்று தோன்றுகிறது. தேவனோடு மட்டுமே அந்த இரத்த அணுவுக்குள் இழுக்கப்பட்டு, அங்கே முத்திரிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியானவரால் அவர்களைச் சுற்றி அந்த உறை போடப்பட்டு, இன்றிரவு இங்கே இருக்கிற இந்த ஆவியானவரை அவர்கள் பிடித்துக் கொள்ளட்டும். கர்த்தாவே, அதை அருளும்.

*50* நமது தலைகள் தாழ்த்தப்பட்டிருக்க, "சகோதரர் பிரன்ஹாம், எனக்காக ஜெபியுங்கள். நான் கர்த்தராகிய இயேசுவுடன் அந்த இரத்த அணுவுக்குள் வர விரும்புகிறேன்" என்று சொல்லி, உங்கள் கையை உயர்த்தக்கூடிய ஒரு பாவியான மனிதரோ அல்லது பெண்ணோ இங்கே இருக்கிறீர்களா என்று நான் ஆச்சரியப்படுகிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, உங்களையும், உங்களையும், உங்களையும். ஓ, கைகள் எங்கும் உயர்கின்றன.

இப்போது, எனது வலது கைப் பக்கத்தில், இங்கே யாராவது உங்கள் கைகளை உயர்த்தி,

"என்னை நினைவுகூருங்கள்" என்று சொல் வீர்களா. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. வெது வெதுப்பான மற்றும் அலட்சியமான யாராவது, உங்கள் கையை உயர்த்தி, "சகோதரர் பிரன்ஹாம், நான் எப்போதுமே ஒரு உண்மையான மெய்யான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ விரும்புகிறேன்" என்று சொல்வீர்களா. நீங்கள் உங்கள் கையை உயர்த்தி, "சகோதரரே, எனக்காக ஜெபியுங்கள்" என்று சொல்வீர்களா. ஓ, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

51 நான்—இப்போது உங்கள் தலைகளைத் தாழ்த்தி, எல்லாரும் பயபக்தியாக இருங்கள், உங்களால் முடிந்தால். எல்லாரும், தேவன் இங்கே நின்று பார்த்துக்கொண்டிருக்கிறார் என்று நீங்கள் விசுவாசித்தால், நான் உங்கள் சகோதரன் மட்டுமே. நான் உங்களை நேசிக்கிறேன்; அதனால்தான் நான் இன்று இரவு இங்கே இருக்கிறேன். அதைத்தான் நான் இங்கே செய்துகொண்டிருக்கிறேன். உங்களை ஏதோ ஒரு சபையில் சேர்ப்பதற்காக நான் முயற்சிக் கவில்லை. சத்தியம் என்று நான் அறிந்திருக்கிற

இதற்கு நீங்கள் வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் விரும்பும் எந்தச் சபைக்கு வேண்டுமானாலும் செல்லுங்கள், ஆனால் நீங்கள் உண்மையாகவே இரட்சிக்கப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் அந்த—அந்தத் தெளிப்பிற்கு வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அங்கே இயேசு கிறிஸ்துவோடு ஒருமுறை இணைக்கப்பட்டுவிட்டால், கிறிஸ்துவின் சரீரத்திற்குள் இரத்தத் தெளிப்புக்கு வந்தவர்களை அவர் என்றென்றைக்கும் பூரணப் படுத்தியிருக்கிறார். நீங்கள் சற்று... இப்போது ஜெபிக்க விரும்புகிறவர்கள், உங்கள் கால்களில் எழுந்து நிற்பீர்களா. அப்படிப்பட்ட ஜெபத்தை விரும்புகிறவர்கள், எங்கும் உங்கள் கால்களில் சற்று எழுந்து நிற்பீர்களா. பாவிகளே, ஒரு வார்த்தை ஜெபத்திற்காக நீங்கள் எழுந்து நிற்பீர்களா? நிற்பவர்களைத் தவிர மற்ற அனைவரும் தங்கள் தலைகளைத் தாழ்த்தியே வைத்திருக்கட்டும். நீங்கள் எழுந்து நின்று, "இதன் மூலமாக, பாவியாகிய என்மேல் தேவன் கிருபையாயிருக்க வேண்டும் என்று நான் சொல்கிறேன்," என்று சொல்லுங்கள். எல்லா

இடங்களிலும் நீங்கள் நிற்பீர்களா? அது சரி. அது சரி.

இப்போது பாவிகளாய் இராத அனைவரும் ஜெபத்தில் இருங்கள். மறுபடியும் பிறந்த எல்லா கிறிஸ்தவர்களும் ஜெபத்தில் இருங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. முதியவர்கள், நரைத்த தலையுடையவர்கள் எழுவதைப் பார்க்கிறேன்; இளைஞர்கள், கறுப்பான பளபளப்பான முடிகொண்டவர்கள்; சிறு பிள்ளைகள்; இளம் பெண்கள்; முதியவர்கள் என எங்கும் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்வதைப் பார்க்கிறேன். உன்னதமான பரிசுத்த ஆவியானவர் இங்கே இருந்து இப்போதே இதைக் கீழே பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று நீங்கள் நினைக்க வில்லையா? இது அவருடைய சித்தமே என்பதை அவர் அறியமாட்டாரா.

**52** இப்போது சற்று வெதுவெதுப்பாய் இருந்து, இயேசுவைக் குறித்து உங்கள் இருதயத்தில் உங்கள் வாழ்க்கையில் ஒருபோதும் நிலைப்படாமல் இருக்கிற நீங்கள், உண்மை யாகவே நீங்கள் விரும்புகிறீர்கள்... வியாதி

யஸ்தர்களுக்கான என் ஜெபத்தைத் தேவன் கேட்பார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்கள்; அப்படியானால் நிச்சயமாகப் பாவிகளுக்காகவும் அவர் அதைக் கேட்பார். நீங்கள் உங்கள் கால்களில் எழுந்து நின்று, "கர்த்தராகிய இயேசுவே, இதன் மூலம், என் இருதயத்தை நீர் அறிவீர்; நான் மறுபடியும் பிறக்க விரும்புகிறேன். இன்று இரவு உமது குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தின் மூலமாக வந்து, அவருடைய ஆவியினால் நிரப்பப்பட்டு, கிறிஸ்துவின் சரீரத்திற்குள் இருக்க நான் உண்மையாகவே விரும்புகிறேன். நான் இரத்த அணுவின் வழியாக வருகிறேன். மேலும் ஆண்டவரே, விசுவாசத்தினாலே அதை ஏற்றுக்கொள்வதற்கு நான் இப்போது எழும்புகிறேன்" என்று சொல்வீர்களா. அப்படிச் செய்வீர்களா? இந்த ஒரு வார்த்தை ஜெபத்திற்காக இப்போதே உங்கள் கால்களில் எழுந்து நிற்பீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஒவ்வொருவரும் அப்படியே நின்றுகொண்டிருங்கள்.

"கர்த்தராகிய இயேசுவே, நான் இப்போது உம்மை ஏற்றுக்கொள்கிறேன்." விசுவாசம்

கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். இது தேவனுடைய வசனம், தேவன் உலகத்தில் அன்புகூர்ந்து தம்முடைய குமாரனைத் தந்தார் என்பதை எனது ஏழ்மையான தாழ்மையான வழியில் உங்களுக்கு எப்படித் தருவது என்று எனக்குத் தெரிந்த மிகச்சிறந்த வழி இதுவே. மேலும் அவர் தம்முடைய குமாரனைத் தந்தார், அவர் கல்வாரியில் மரித்தார். மேலும் ஒரு பாவியாகிய உங்களை மீட்டு, பிதாவின் ஐக்கியத்திற்கு உங்களை மீண்டும் கொண்டுவர அவருடைய சரீரத்திலிருந்து இரத்தம் கொண்டுவரப்பட்டது. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

53 ஜெபத்திற்காக இப்போது நின்று கொண்டிருக்கும் இந்தப் பெரிய மாபெரும் கூட்டத்துடன் இணைந்து நிற்க இன்னும் யாராவது விரும்புகிறீர்களா? இன்னும் ஒருவர், நாம் நம்முடைய... அங்கே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரனே. இன்னும் சிலர் இருக்கிறார்கள் என்று நான் உணர்கிறேன். அது சரி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரியே. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அது சரி.

மக்களே, நான் ஒரு மதவெறியன் அல்ல. அதை உங்களுக்கு நிரூபிக்க நான் முயற்சித்திருக்கிறேன், அல்லது நான் ஒரு மதவெறியன் அல்ல என்பதை தேவன் நிச்சயமாக நிரூபித்திருக்கிறார். ஆனால் இங்கே எழுந்து நிற்க விரும்பும் வேறு சிலரும் இருக்கக்கூடும் என்று நான் உணர்கிறேன். வேண்டாம்... "சரி, நான் முன்பே நின்றிருக்கிறேன்" என்று நீங்கள் சொல்கிறீர்கள். இன்னொரு முறை அப்படிச் செய்வீர்களா? இந்த முறை மட்டும் எழுந்து நின்று, "ஆண்டவரே, என்மேல் கிருபையாயிரும்" என்று சொல்லுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப் பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. "பிதாவே, இப்போது கிருபையாயிரும். ஆண்டவரே, அதை நீர் அருளுவீரா?" அப்படியே நின்றுகொண்டிருங்கள். ஆராத னையின் இந்தப் பகுதியை நாம் முடிவுக்குக் கொண்டுவரும் இந்த வேளையில், ஜெபத்தில் நினைவுகூரப்பட விரும்புகிறவர்கள் எங்கும் அப்படியே நின்றுகொண்டிருங்கள். நில்லுங்கள். சரி, நீங்கள் உங்கள் தலைகளைத் தாழ்த்தியிருக்கும் வேளையில்.

*54 எங்கள் அன்பான பரலோகப் பிதாவே, உம்மைத் தங்கள் இரட்சகராக இப்போது ஏற்றுக்கொள்கிற இவர்கள் மீது தெய்வீக இரக்கம் உண்டாகும்படி நான் ஜெபிக்கிறேன். ஓ தேவனே, நீர் இந்தக் கூட்டத்தைப் பார்த்து மக்களின் வியாதிகளையும் அவர்களுடைய— அவர்கள் யார் என்பதையும் காண முடியுமானால், நீர் இப்போது இங்கே உள்ள இருதயங்களோடு பேசிக்கொண்டிருக்கிறீர். நின்றுகொண்டிருக்கிற இவர்களை நீர் காண்கிறீர், நிற்க வேண்டியவர்களையும் காண்கிறீர். பிதாவே, அவர்களுக்கு அந்த வார்த்தையை மட்டும் பேசுவீரா? அவர்களுடைய ஒவ்வொரு பாவத்தையும் மீறுதலையும் மன்னியும். உமது அன்பான குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவின் இரத்தம், எல்லா அநீதியிலிருந்தும் அவர்களை இப்போதே சுத்திகரிப்பதாக. மேலும் உமது மகிமைக்காக அவர்கள் தாழ்மையுடனும் அன்புடனும் இரட்சிக்கப்படுவார்களாக.*

*55 இப்போது, நம்முடைய தலைகள் தாழ்த்தப்பட்டிருக்க, இசைக் கருவி ஒரு கணம் ஏதோ ஒரு பாடலை மென்மையாக இசைக்கும்.*

[ஒரு சகோதரன் பாடலைப் பாடுகிறார்]

[பகலின் முடிவில் நான் நதியருகே வரும்போது]

பேசுகிறார்...

[துயரத்தின் கடைசி காற்றுகள் வீசியடிக்கும்போது;]

[எனக்கு வழிகாட்ட யாரோ ஒருவர் காத்துக்கொண்டிருப்பார்,]

[நான் தனியாக யோர்தானைக் கடக்க வேண்டியதில்லை.]

[நான் தனியாக யோர்தானைக் கடக்க வேண்டியதில்லை,]

[என் பாவங்களை எல்லாம் நிவர்த்தி செய்ய இயேசு மரித்தார்;]

[நான் இருளைக் காணும்போது,]

[அவர் எனக்காகக் காத்துக்கொண்டிருப்பார்,]

[நான் தனியாக யோர்தானைக் கடக்க வேண்டியதில்லை.]

*56* இப்போது, நின்றுகொண்டிருக்கிற நீங்கள், பாடல் இன்னும் போய்க் கொண்டிருக்கும்போது, ஒரு வார்த்தை ஜெபத்திற்காகச் சற்று நேரம் இங்கே பலிபீடத்தண்டை வருவீர்களா? நின்றுகொண்டிருக்கும் அனைவரும், ஒரு கணம் பலிபீடத்தண்டை இறங்கி வாருங்கள், வருவீர்களா? உங்களுடைய புதிய வாழ்க்கைக்காக, பாடல் இசைக்கப்படும்போது, பயபக்தியுடன் வாருங்கள், நாங்கள் உங்கள் மீது கைகளை வைக்கும்படி ஒரு கணம் இங்கே பலிபீடத்திற்கு முன்பாக வாருங்கள்.

[சகோதரன் தொடர்ந்து பாடுகிறார். நாடாவில் வெற்றிடம்]

...இப்போது இந்தக் கூட்டத்தின் மீது. அந்த வெளிச்சம் மக்கள் நடுவே அசைவாடுவதை நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அது என்ன செய்துகொண்டிருக்கிறது? நிச்சயமாக, அது வியாதியஸ்தர்களைக் குணப்படுத்துகிறது, மக்களின் இருதயங்களோடு பேசுகிறது. சபை

மட்டும் அவரை அனுமதிக்குமானால் இந்த நேரத்தில் அவர் என்னவெல்லாம் செய்ய முடியும். நான் பேச ஆரம்பித்ததிலிருந்து இன்னும் சிலர் வந்திருக்கிறார்கள். இன்னும் சிலர் இருக்கிறீர்களா? ஒரு வார்த்தை ஜெபத்திற்காகச் சற்று நேரத்தில். அவர்கள் மறுபடியும் பிறக்க விரும்புகிறார்கள். அன்பான கர்த்தராகிய இயேசுவை, தேவனுடைய குமாரனை, மேசியாவை ஏற்றுக்கொள்வதற்காக அவர்கள் இங்கே இருக்கிறார்கள். சரி.

57 பிதாவே, அவர்கள் தங்கள் தவறுகளை எல்லாம் அறிக்கையிட்டு, அவர்களை மன்னித் ததற்காக உமக்கு நன்றி செலுத்தி, இங்கே பலிபீடத்தண்டை பயபக்தியுடன் நின்று கொண்டிருக்கும்போது, நீர் இந்த மக்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்று இப்போது ஜெபிக்கிறோம். பிதாவே, நீர் உமது வார்த்தைக்குக் கடமைப்பட்டிருக்கிறீர். நீர், “விருப்பமுள்ளவன் வரக்கடவன், அவன் வரக்கடவன்” என்று சொன்னீர். மேலும், “என் பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான். என்னிடத்தில் வருகிறவனை நான் ஒருபோதும்

புறம்பே தள்ளுவதில்லை. நான் அவர்களுக்கு நித்தியஜீவனைக் கொடுப்பேன், கடைசிநாளில் அவர்களை எழுப்புவேன்” என்று சொன்னீர். உம்முடைய வார்த்தை அவ்வாறு பேசுகிறது, பிதாவே. நீர் நித்தியஜீவனைக் கொடுத்திருக்கிறீர் என்பதை நான் அறிவேன், நாங்கள் உமக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோம்.

இப்போது பிதாவே, எங்கள் சகோதரன் பாடும்போதும் மக்கள் ஜெபிக்கும்போதும், கூட்டத்தின்மீது அசைவாடுவீராக. இயேசுவின் நாமத்தில்.

சகோதரன் இந்த அடுத்த சரணத்தைப் பாடும்போது ஜெபத்தில் இருங்கள்.